வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 293 | பக்கங்கள் : 16

## இனப்பிரச்னைக்கான தீர்வு

# அநுர அரசின் கருத்துக்களை அவதானிக்கின்றது புதுடில்லி!

## அநுரவிடம் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த திட்டம்

கொழும்பு, ஒக்ரோபர் 20

**தமிழ் மக்களின் இனப்பிரச்னை தொடர்பில் சமகால அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் வெளிப்படுத்திவரும் கருத்துகள் தொடர்பில் புதுடில்லி மிகுந்த அவதானம் செல்லுத்தியுள்ளது என அறியமுடிகின்றது.**

பொதுத் தேர்தல் முடிந்தவுடன் பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்துவைத்துவிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியா செல்ல திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவான பின் முதல் இராஜதந்திரியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் கடந்த 04ஆம் திகதி இலங்கைக்கு அதிகார பூர்வ பயணமொன்றை மேற்கொண்டதுடன், ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட பல்வேறு தரப்பினரை சந்தித்திருந்தார்.

அரச தரப்பினருடான சந்திப்பில் இலங்கைக்கு தொடர்ந்து இந்தியா உதவிகளை வழங்கும் எனக் கூறியிருந்ததுடன், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக கருதப்படும்

15

## நாளை முதல் மீண்டும் யாழ்தேவி!

கொழும்பு, ஒக். 20

வடக்கு ரயில் மார்க்கத்தில் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இதன்படி, யாழ்தேவி ரயிலை அன்றைய தினம் சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் ரயில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு ரயில் மார்க்கத்தில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் காரணமாக கொழும்பு - கோட்டையிலிருந்து மஹவ வரை மாத்திரமே தற்போது ரயில் சேவை முன்னெடுக்கப்படுகிறது. (அ)

## பொதுத் தேர்தலுக்கு பிறகு ரணில், சஜித் ஒன்றிணைவு?

கொழும்பு, ஒக். 20

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர்காலத்தில் ஒன்றிணைவதற்குரிய சாத்தியம் உள்ளது எனவும், பொதுத்தேர்தலின் பின்னர் இந்த சங்கமம் நடக்கலாம் எனவும் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிடவைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன.

15



## பதில் பொலிஸ்மா அதிபர் யாழ் விஜயம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 20

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்கள் தொடர்பிலான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும், தெரிவாட்சி அலுவலருமான திரு. மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று பி.ப 03.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் விசேடமாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்துகொண்டு

15

## வடக்கு-கிழக்கில் காணி விடுவிப்பு உத்தரவாதத்துடன் அநுர அரசு தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரலாம்!

### மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 20

மலையகத்தில் வீட்டு காணி, வாழ்வாதார காணி, தனி வீடு ஆகியன அடங்கிய 'காணி உரிமை' உத்தரவாதங்களையும், வடகிழக்கில் தனியார் காணிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அகற்றல், போர் முடிந்து 15 வருடங்களுக்கு பின்னும் இருக்கின்ற மேலதிக இராணுவ முகாம்களை மூடல், இவை மூலம் தனியார் காணிகள் விடுவிப்பு ஆகியன அடங்கிய 'காணி உரிமை' உத்தர வாதங்களையும் வழங்கி விட்டு அநுர அரசு தமிழ் மக்களின் வாக்குகளை மலையகத்திலும், வடக்கு கிழக்கிலும் கோரலாம் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் பங்காளிகளாக

15

## தேர்தல் நெருங்குவதால் நெருக்கடியில் அநுர அரசு

### ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை வெளிப்படுத்தக் கோரி அழுத்தம்

கொழும்பு, ஒக். 20

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பிலான இரண்டு ஜனாதிபதி ஆணைக்குழுக்களினதும் விசாரணை அறிக்கைகளை உடனடியாக அரசாங்கம் வெளியிடவேண்டும் என்று எதிர்க் கட்சிகளால் அழுத்தம் கொடுக்கப்பட்டு

15

## காணாமலாக்கப்பட்டோர் சங்க இணைப்பாளர் கைதாகி பிணை!

மன்னார், ஒக். 20

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா நேற்று மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட வேளை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மனுவல் உதயச்சந்திரா, வைத்திய தேவைகளுக்காக நேற்றுமுன்தினம் மன்னாரில் இருந்து கொழும்பு சென்ற நிலையில், அவரை கைது செய்ய பொலிஸார் அவரது வீட்டுக்கு சென்றனர்.

15

## எம் மீதான குற்றச்சாட்டுகளை அநுர ஆதாரபூர்வமாக நிரூபிக்கவேண்டும்!

### கோருகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 20

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கத்துக்கு காலவகாசம் வழங்க வேண்டும். ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து 1 மாதம் கூட நிறைவடையவில்லை. ஆகவே விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்க முடியாது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

## கொலையாளிகள், கொள்ளையர்கள் எங்கள் ஆட்சியில் தப்பவே முடியாது!

### அறிவித்தது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 20

"தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கள்வர்கள், கொலையாளிகள் தப்பவே முடியாது. உரிய வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு, சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் பீதியடைந்துள்ள சிலரே, தற்போது கூச்சலிடுகின்றனர்."

- இவ்வாறு தேசிய மக்கள்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளீர்க்க வேண்டும்

## வடக்கு கடற்றொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழில் கூட்டாக கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 20

வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளீர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, கிளிநொச்சி - பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் யோசப் பிரான்சிஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச இணைப்பாளர் திரு ஞானதீபம் அன்ரனி அல்பட், மன்னார் - மாந்தை மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் அல்போன்ஸ் டேவிட், நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச உப தலைவர் பிலேந்திரன் அன்ரனி தவராசா, மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் ராஜா குருஸ், யாழ். வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் ஆகியோர் இணைந்து யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

“முல்லைத்தீவில் 4730 குடும்பங்களும், மன்னாரில் 15, 030 குடும்பங்களும், கிளிநொச்சியில் 4,120 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 21, 800 குடும்பங்களும் கடற்றொழிலை தமது பிரதானமான வாழ்வாதாரமாக கொண்டிருக்கின்றனர். இந்த நான்கு மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளான நாம், எமது வாழ்வாதாரம் சார்ந்த பிரச்னைகளையும் அதில் எமது நிலைப்பாடுகள் மற்றும் அதற்கான தீர்வுகளை 2024ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரிடம் முன்வைக்கின்றோம்.

1. இந்திய இழுவைமடிப் படகுகள் வட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும், நாட்டின் கடல் வளத்தையும் அழித்து செல்கின்றன. இலங்கை அரசாங்கம் இதற்கு கைது செய்தல், தண்டப்பணம் அறவிடல் மூலம் தொடர்ந்து இந்திய இழுவைமடிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். எல்லை மீறும் இந்திய இழுவைமடி பிரச்னைக்கு நீண்ட கால தீர்வுகள் தேவை. இது சம்பந்தமான பேச்சுகள் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுடன் 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டு இணக்கத்தின்படி இடம்பெற வேண்டும். இவ்வாறான தீர்வுகளுக்கான ஆதரவை வழங்க வேண்டும்.

2. சட்ட ரீதியாக தடை செய்யப்பட தொழில்கள் மற்றும் முறைகளை நிறுத்த வேண்டும்.

(ஏ) - 2017ஆம் ஆண்டு 11ஆம் இலக்க சட்டத்தின்படி உள்ளூர் இழுவைமடிகள் தடை செய்யப்பட்டுள்ளன. அச்சட்டத்தை இறுக்கமாக அமுல்படுத்த வேண்டும்.

(பி) சுறுக்கு வலைகள், வெளிச்சம் போட்டு மீன் பிடித்தல், உழவு இயந்திரம் மூலம் கரை வலை இழுத்தல் போன்ற கடல் வளத்தை அழிக்கும் சட்டவிரோத தொழில் முறைகளை தடுக்க 1996ஆம் ஆண்டு 2ஆம் இலக்க சட்டத்தை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தி. அவற்றை முற்றாக தடை செய்ய வேண்டும்.

(சி) அனுமதியின்றி கடற்றொழிலில் ஈடுபடும் வெளி மாவட்ட கடற்றொழிலாளர்களை தடை செய்ய வேண்டும்.

3. கடற்றொழில் திணைக்களத்தால் நடத்தப்படும் கிராமிய கடற்றொழில் அமைப்புகள், கடற்றொழிலாளர்களை பிளவுபடுத்துவதுடன்

தசாப்தங்களாக இயங்கிவந்த கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களை வலுவிழக்கச் செய்துள்ளது. கிராமிய கடற்றொழில் அமைப்புகளை அரசு நீக்கி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்த வேண்டும்.

4. அபிவிருத்தி என்ற போர்வையில் சிறு கடற்றொழிலாளர்களை பாதிக்கும் முறைமைகளை கட்டுப்படுத்த வேண்டும். அனுமதியற்ற கடலட்டை பண்ணைகளை ஆய்வுகள் ஊடாக மீள் ஒழுங்கமைக்க வேண்டும். மேலும், சூழலை மாசுபடுத்தும் இறால் பண்ணைகளை நீக்க வேண்டும். கரையோரத்தில் காற்றாலைகள் போடப்படுவதை மீளாய்வு செய்து கடற்றொழிலா ளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் அவற்றை கொண்டு செல்ல வெண்டும். இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்களை மீளக் குடியமர்த்துவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான கரையோர காணிகளை விடுவிக்க வேண்டும்.

5. கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த ஆய்வுகளும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். கடற்றொழில் சார்ந்து இடம்பெறும் ஆய்வுகள் மற்றும் அதன் வெளிப்பாடுகள், அந்தத் துறை சார்ந்த சங்கங்களுடன் இணைந்து நடத்தப்பட வேண்டும் என்பதுடன் அவை வெளிப்படைத்தன்மையானதாகவும் இருக்க வேண்டும். மீனவர்களுக்குத் தேவையான இறங்குதுறைகள், தொழில் நுட்பங்கள் மற்றும் அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்” என்று வலியுறுத்தினர்.(எ)

# அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பது தொடர்பில் விரிவாக ஆராய்வு

மன்னார், ஒக். 20

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அனைத்து முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே. திலீபன் மற்றும் முப்படையினர், திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில், வட கீழ் பருவப் பெயர்ச்சி காலத்தில் ஏற்படவுள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாகவும் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது? அனர்த்தம் ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் கலந்துரையாடல் நடைபெற்றது.

மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது இயற்கை அனர்த்தங்களால் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகும் ஒரு பகுதியாக காணப்படுகின்றது. இதன் காரணமாக அனர்த்தங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதான குளங்களில் நீர் அதிகமாக பெருக்கெடுக்கும் போது ஏற்படுகின்ற ஆபத்துக்களை குறைப்பது சம்மந்தமாகவும், மாகாண சபைக்கு உட்பட்ட நீர்ப்பாசனக் குளம், ஆறுகளில் திடீரென ஏற்படுகின்ற வெள்ள நிலையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 165 இற்கும் மேற்பட்ட குளங்கள் கமநல அபிவிருத்தி திணைக்களங்களுக்குள் காணப்படுகின்றன.

அந்தக் குளங்களில் ஏற்படுகின்ற வெள்ள நிலமையை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும், மன்னார் மாவட்டத்தில் வெள்ள நிலைமையின் போது மக்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு 30 இற்கும் மேற்பட்ட தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அவ்வாறான பாதுகாப்பு நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ள நிலைமை ஏற்படுகின்ற போது அதை கடலுக்கு வெளியேற்றுகின்ற சந்தர்ப்பங்களில் எதிர்நோக்குகின்ற பிரச்னைகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.(எ)




# ஊடகவியலாளர் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக். 20

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20 ஆம் திகதி ஆயுததாரிகளால் நிமலராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

போர்க்காலத்தின் போது இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தில் இருந்து சர்வதேச ஊடகங்களின் ஊடகவியலாளராக செயல்பட்டு வந்திருந்த நிலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் நிமலராஜனின் நினைவேந்தல் நிகழ்வு யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது, ம. நிமலராஜனின் திருவுருவப்படத்துக்கு சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

வெடிகுண்டு மிரட்டல் காரணமாக

# கட்டுநாயக்காவில் இந்திய விமானம் அவசரமாக நேற்றுத் தரையிறக்கம்

கொழும்பு, ஒக். 20

மும்பையிலிருந்து புறப் பட்ட இந்திய விமானம் ஒன்று வெடிகுண்டு மிரட்டல் காரண மாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் அவசரமாக தரையிறக்கப்பட் டது.

இந்த விமானத்திலிருந்து பயணிகள் உடனடியாக வெளியேற்றப்பட்டு விசேட சோத னைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தியாவின் விஸ்தாரா விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்றே இவ்வாறு தரையிறங்கியது.




குறித்த விமானத்தில் 96 பயணிகளும் 8 பணியாளர்களும் இருந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

# முடிவை மாற்றினார் ஹிருணிக்கா!

கொழும்பு, ஒக். 20

ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பட்ட அக் கட்சியின் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளரான ஹிருணிக்கா பிரேமசந்திரவை கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ சமரசப்படுத்தியுள்ளார் என தெரியவருகின்றது.

இதன் ஓர் அங்கமாகவே ஹிருணிக்காவின் பதவி விலகல் கடிதத்தை கட்சி ஏற்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் மகளிர் அணியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதாக ஹிருணிக்கா பிரேமசந்திர அறிவித்திருந்தார். இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தை கட்சிச் செயலாளருக்கு அனுப்பி இருந்தார்.

இந்நிலையிலேயே ஹிருணிக்காவை நேரில் அழைத்து பேசி, அவரை கட்சித் தலைவர் சமரசப் படுத்தியுள்ளார். இந்த சந்திப்பின் பிறகு ஹிருணிக்கா பிரேமசந்திரவும், கட்சி செயலாளரும் இணைந்து கூட்டாக ஊடக சந்திப்பை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றி மாகாண மட்ட சிங்கள போட்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 20

**எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி வடமாகாண மட்ட சிங்கள போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**



இந்த போட்டி நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கோட்டக்கல்வி அலுவலக கட்டடத் தொகுதியில் நடைபெற்றன.

எந்த விதமான அடிப்படை ஏற்பாடுகளும் இன்றி வட மாகாண கல்வித் திணைக்களத்தால் இந்தப் போட்டி நிகழ்வுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக நடுவர் குழு உரிய முறையில் அமைக்கப்படாத நிலையில் பல்வேறு பாடசாலைகளில் இருந்து மாணவர்களை அழைத்து வந்த பொறுப்பாசிரியர்களை நடுவர்களாக நியமித்தமை தொடர்பில் பல்வேறுபட்ட ஆட்சேபனைகளை வெளியிட்ட பெண் ஆசிரியை ஒருவரை கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் பாணியில் செயல்பட்டிருந்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இவ்வாறான பல சர்ச்சைகள், குழப்பங்களுக்கு மத்தியில் இந்தப் போட்டி நிகழ்வுகள் நிறைவு பெற்றிருந்தன.

ஒரு மாகாண மட்ட போட்டி நிகழ்த்தப்படுவதாயின், ஏற்கனவே உரிய முறையில் அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு திட்டமிட்டிருத்தல் வேண்டும். ஆனால், எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாமல் இந்தப் போட்டி நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

குறிப்பாக, காலை 8. 30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்துக்கு மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தின் தூரப் பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் இந்தப் போட்டி நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டிய தேவை இருந்தபோதிலும் இலகுவில் அடையக்கூடிய ஒரிடத்தில் இந்தப் போட்டி நிகழ்வுகள் நடத்தப்படவில்லை.

ஐந்து மாவட்ட மாணவர்களும் இலகுவில் செல்லக்கூடிய ஒரு மத்திய நிலையத்தில் இந்த போட்டிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான ஒழுங்குபடுத்தல்கள் பெரும் அசௌகரியங்களை மாணவர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறது.

இப்போட்டிகளுக்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த வளாக மானது துப்புரவு செய்யப்படாது குப்பைகள் நிறைந்து பாதுகாப்பற்ற ஒரு பகுதியாகவே காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்த பகுதியில் மாணவர்கள் தங்குவதற்கு எந்த விதமான இட வசதிகளும், ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படவில்லை. அத்தோடு, அவ்விடங்களில் அமர்வதற்கு கதிரைகள் இடப்படாதிருந்ததையும் பொறுப்பாசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டினர்.

அங்கே காணப்பட்ட ஒரு கொட்டகை பாதுகாப்பற்ற நிலையில் கூரை விழும் அபாயத்தில் இருந்ததாகவும் இந்த கூரை விழுந்தால் பல மாணவர்களுக்கு உயிராபத்து கூட ஏற்படலாம் என்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த வளாகத்தில் குடிநீர் வசதி எதுவும் மாணவர்களுக்காக செய்து கொடுக்கப்படவில்லை. 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய இந்தப் போட்டி நிகழ்வில் குடிநீர் வசதிகூட செய்து கொடுக்கப்படாமை மாணவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளது. (எ)



## நினைவுத்தூபியில் நினைவேந்தல்

மட்டக்களப்பு, ஒக். 20

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு காந்திபூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபியில் நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய நினைவுதின நிகழ்வின்போது, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் திருவுருப் படத்துக்கு ஊடகவியலாளர்கள் இணைந்து மலர்மாலை அணிவித்து, நினைவுச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தினர்.

சிவில் சமூகச் செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொது நலன்விரும்பிகள் எனப் பலரும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

# பெரும்பான்மை உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வார்கள்!

### நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை

கொழும்பு, ஒக். 20

பொதுஜன பெரமுனவிலிருந்து பெரும்பான்மை உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வார்கள் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கட்சி என்ற வகையில் பெரும்பாலான உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதே எம்முடைய எதிர்பார்ப்பாகும்.

புதிய தரப்பினர் பலர் பொதுஜன பெரமுன சார்பில் முன்னிலையாகியுள்ளனர். அதேபோன்று பொதுஜன பெரமுன கிராமிய மட்டத்தில் பலமான கட்சியாகவே உள்ளது.

பல கட்சிகளில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்ற தீர்மானம் இன்றியே இருக்கின்றனர்.

நாம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தாலும் கூட கட்சி என்ற வகையில் வெற்றி பெற்றுள்ளோம்.

அனைத்து வேட்பாளர்களையும் வெற்றியடையச் செய்யத் தேவையான தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் பெரும்பாலான உறுப்பினர்களை எம்மால் பாராளுமன்றத்துக்கு அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

தற்போது பொதுஜன பெரமுன புதிதாகியுள்ளது. புதிய எதிர்பார்ப்பு உள்ளது"- என்றார். (எ)

# எதிர்க்கட்சி இல்லாத சமயத்தில் நாட்டில் ஜனநாயகம் இருக்காது

கொழும்பு, ஒக். 20

பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லாத சமயத்தில் நாட்டில் ஜனநாயகம் என்ற ஒன்று இருக்காது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"அரசாங்கம் நாட்டு மக்களின் வரிச்சுமையை குறைத்து நிவாரணம் வழங்கும் எனக் கூறியது. இருப்பினும் தற்போது பொருட்களின் விலை அதிகரித்துச் செல்வதையே காண முடிகின்றது. அதே போன்று பலமான அரசாங்கம் தான் இருக்க வேண்டும் பலமான எதிர்க்கட்சி தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லாத சமயத்தில் நாட்டில் ஜனநாயகம் என்ற ஒன்று இருக்காது. மாறாக ஏகாதிபத்திய வாதமே காணப்படும். சர்வதேச நாணய நிதியத்துடன், பேச்சுகளை நடத்தி வரிச்சுமையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதி வியாபாரத்தை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு செயல்படவில்லையாயின் அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்க நேரிடும்"- என்று எச்சரித்தார். (எ)

# ரயில் சேவை மீண்டும் வழமைக்கு திரும்பியது

கொழும்பு, ஒக். 20

கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான ரயில் சேவை நேற்று மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மின்னேரியா மற்றும் ஹிங்குரக்கொடைக்கு இடைப்பட்ட ரொட்டவெள பிரதேசத்தில் கொலன்னாவை எண்ணெய் சேமிப்பு முனையத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி எரிபொருளை ஏற்றிச் சென்ற ரயிலில் காட்டு யானைக் கூட்டம் மோதியதில் பெரும் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தால் ரயில் பாதை கடுமையாக சேதமடைந்ததுடன், ரயிலின் எரிபொருள் தாங்கிகள் கவிழ்ந்தன. இரண்டு யானைகள் பலியானதுடன், சேதமடைந்த ரயில் பாதை புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் ரயில் சேவை மீண்டும் வழமைக்குத் திரும்பியது. (எ)

### வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற கொலை

# களங்கம் ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக வியாழேந்திரன் பொலிஸில் முறைப்பாடு

மட்டக்களப்பு, ஒக். 20

எனது வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற கொலை தொடர்பில் அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களில் கருத்து வெளியிட்டவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு நேற்று வருகைதந்த வியாழேந்திரன் அங்கு இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலான மற்றும் முற்றுமுழுதான பொய்யான கருத்துகள் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

நபர் ஒருவர் பேஸ்புக் ஊடாக நேரலை செய்து என்னை தமிழர் கழகத்துக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான கருத்துகளை முன்வைத்து வருகின்றார். முன்பு ஒரு தடவை அவருக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்தபோது, தான் இனி அவ்வாறு செயல்படமாட்டேன் என எங்களிடம் வந்து தெரிவித்ததையடுத்து அந்த வழக்கை வாபஸ் பெற்றேன்.

ஆனால், அவர் மீண்டும் எனது பெயருக்கும் கட்சிக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் தகாத வார்த்தைகள் மூலமாகவும் முகப்புத்தகத்தில் நேரலை செய்துள்ளார். அவருக்கு எதிராகவும் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சலான எதிர்க்கட்சியே நாட்டுக்கு மிகவும் அவசியம்

## திலித் ஜயவீர சொல்கிறார்



கொழும்பு, ஒக். 20

**துணிச்சலான எதிர்க்கட்சி ஒன்றால் மட்டுமே ஆளும் அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச்செல்ல முடியும் என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"துணிச்சலான எதிர்க்கட்சியால்தான் ஆளும் அரசை சரியான பாதையில் இட்டுச்செல்ல முடியும். பலவீனமான எதிர்க்கட்சி வந்தால், அரசாங்கம் எதைச் செய்தாலும் அதற்கு கையை தூக்குவார்கள்.

ஆட்சியில் இருக்கும் அரசுக்கு வாய்ப்பு வழங்க விரும்புகிறோம். அதுதான் எங்களின் நேர்மையான முயற்சி. ஆனால், அவர்கள் தங்கள் திட்டத்தில் நமது நாட்டின் ஒற்றுமையையும் தேசியத்தையும் பாதிக்கும் ஒரு திட்டத்தை முன்மொழிந்துள்ளனர். அந்த முன்மொழிவின் உள்ளடக்கங்களை ஒரு போதும் ஏற்க நாங்கள் தயாராக இல்லை"- என்றார். (எ)

# தேசிய ஜனநாயக முன்னணியின் கல்குடா தேர்தல் பணிமனை திறப்பு

கல்குடா, ஒக். 20

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான தேசிய ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு, கல்குடாத் தொகுதிக்கான தேர்தல்

பணிமனை கிரானில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் பிரதியமைச்சரும், தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) இந்தப் பணிமனையைத் திறந்து வைத்தார்.

20 அம்சங்கள் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தையும் அவர் வெளியிட்டு வைத்தார். கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (எ)

# தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு



வவுனியா, ஒக். 20

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது.

வன்னி மாவட்டத்தில் இம்முறை தமிழ் அரசுக் கட்சி சார்பாக ப. சத்தியலிங்கம், து. ரவிகரன், கா. திருமகன், தே. சிவானந்தராசா, பா. கலைதேவன், ந. ரவீந்திரகுமார், வ. கமலேஸ்வரன், செ. டினேசன், அ. கலீபா ஹலிஸ்ரா ஆகியோர் போட்டியிடுகின்றனர். (எ)

# "போலித் தேசிய அரசியலால் நாம் பட்டதுயரங்கள் போதும்"



கிளிநொச்சி, ஒக். 20

கிளிநொச்சி மாவட்ட மக்கள் போலித் தேசிய அரசியலால் பட்ட துயரங்கள் போதும். பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் என்று கூறுவார்கள். இதனடிப்படையில் இம்மாவட்ட பெண்களாகிய நீங்கள் உங்கள் குடும்பங்களிலிருந்து எமது கட்சியின் கொள்கை மற்றும் வழிநடத்தலை ஏற்று தமிழ் அரசியல் பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளீர்கள் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈ. பி. டி. பியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் செயல்பாட்டாளர்களுடனான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"கிளிநொச்சி மாவட்டம் என்பது பல்வேறு அழிவு யுத்தத்தை அதிகளவு பாதிப்புகளை கண்ட மாவட்டமாகும். அதே போன்று இங்குவாழும் மக்களும் பல்வேறு துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள்.

ஆனால், தற்போது அந்த நிலை மாற்றம் கண்டுவருகின்றது. இதேநேரம், கிளிநொச்சி மாவட்டத்துக்கு எமது கட்சி பல்வேறு வழிகளில் அபிவிருத்தியையும் மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளது. இதற்கு இன்றைய கிளிநொச்சி நகரமே சாட்சி சொல்லும்.

இதேநேரம் இதுவரை காலமும் தம்மை போலித் தேசிய வாதம் ஏமாற்றிவந்துள்ளது என்பதையும் இம்மாவட்ட மக்கள் இனங்கண்டு அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற நிலைக்கு வந்துள்ளனர்.

இந்த மாற்றம் இம்முறை ஈ. பி. டி. பியை நோக்கியதாகவே இருக்கின்றது. இந்த மாற்றம் உங்கள் உறவுகள், உங்கள் கிராமங்கள், உங்கள் பிரதேசங்கள் என பரவலாக விரிவடைவதனூடாகவே முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அத்துடன் அந்த மாற்றத்தை உங்களால் எற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இதேநேரம் தமிழ் அரசியல் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுள் மக்கள் நலனையும் மக்கள் மீதான அக்கறையையும் அவர்களது அரசியல் அபிலாசைகளையும் ஒருங்கிணைத்து சிறந்த பொறிமுறையுடன் அவர்களது எதிர்காலம் சிறப்பானதாக மாற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஆரம்பம் முதல் இன்றுவரை தனது சேவைகளை முன்னெடுத்த வரும் ஒரே கட்சியாக ஈ. பி. டி. பியே இருந்து வருகின்றது"- என்றார். (எ)

# "தமிழ்ப் பாராளுமன்ற உறுப்புரிமையை இல்லாமல் செய்ய ஐ. ம. ச. சதித்திட்டம்"

கொழும்பு, ஒக். 20

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்புரிமையை இல்லாமல் செய்ய ஐக்கிய மக்கள் சக்திக்குள் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டி மாயாவ மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எங்களது நாட்டில் யார் ஜனாதிபதியாக இருக்கின்றார், யாருடைய கட்சி அரசாங்கம் இருக்கின்றது என்பதை தாண்டி அந்த அரசாங்கத்தில் எங்களது உறுப்புரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டிலே அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாக இருக்கின்றார். ஆனால், அவர் ஜனாதிபதியாகும் போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்திருக்கிறது என்று என்ற கேள்வியை நாங்கள் கேட்க வேண்டிய இருக்கின்றது.

மக்கள் மீது வாரிச் சுமை அதிகமாக இருக்கின்றது, வற் வரியை நாங்கள் நீக்குவோம் - அதேபோல உழைக்கும் போது செலுத்துகின்ற வரியை நாங் கள் குறைப்போம் என்றெல்லாம் கூறியவர்கள், இன்று அது பற்றிப் பேசுவதாக இல்லை. அதேபோல் பெற்றோல், டீசல் மீது விதிக்கப்படுகின்ற வரிகள் அதிகம். அந்த வரியை குறைத்து விலைகளை குறைப்போம் என்றார்கள். ஆனால், அதைப் பற்றி இன்று அவர்கள் பேசுவதாக இல்லை.

அதனையும் தாண்டி நாங்கள் ஒன்று சொல்ல வேண்டும், கண்டி மாவட்டத்ினுடைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்புரிமையை இல்லாமல் செய்ய ஐக்கிய மக்கள் சக்திக்குள் சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது. அந்த சதித் திட்டத்தில் இருந்து விடுபட்டு நான் என்னுடைய முடிவை எடுத்தேன்" - என்றார். (எ)

# சம்பள அதிகரிப்பை வழங்க ஜே. வி. பி. முற்றாக மறுக்கிறது

## துமிந்த திஸநாயக்க சாடல்

கொழும்பு, ஒக். 20

அரச உத்தியோகத்தர்கள் 20, 000 ரூபாய் சம்பள அதிகரிப்பை கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது, உங்களோடு நாம் இருக்கின்றோம் என்றும் 6 மாதங்களுக்கு ஒரு முறை சம்பள அதிகரிப்பை வழங்குவதாகவும் கூறிய ஜே. வி. பி. இன்று அந்த கருத்தை முற்றாக மறுத்துள்ளது.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"எந்தவொரு தேர்தலின் பின்னரும் ஆட்சியைக் கைப்பற்றும் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும். ஆனால், தற்போதைய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளைக் கூட மறுக்கின்றது. கூறியவற்றை இல்லை என மறுப்பதற்கு தயாராக வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்த விரும்புகின்றோம்.

அவ்வாறில்லை எனில் மக்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும். சகல அரச உத்தியோகத்தர்களும் சோகமடைந்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன"- என்றார். (எ)

# சஜித் தலைமையில் பலமான அரசாங்கம் உருவாக வேண்டும்

## இராதாகிருஷ்ணன் சொல்கிறார்

ஹற்றன், ஒக். 20

இந்த நாட்டில் பலமான எதிர்க்கட்சியை அமைப்பதை விட பலமான அரசாங்கம் ஒன்றை எமது தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்க வேண்டும் என்பதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நோக்கம் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வட்டவளை தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"மக்களுக்கு சேவைகளை செய்துவிட்டு மக்கள் மத்தியில் வந்து வாக்கு கேட்கிறோம். புதிதாக வருபவர்கள் மக்கள் மத்தியில் சென்று கூறுகிறார்கள் எமக்கு வாக்களியுங்கள் பிறகு உங்களுக்கு எமது சேவையை முன்னெடுப்போம் எனறு. புதிதாக வாக்கு கேட்பவர்களை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை காண்பது என்பது கடினம். ஏனெனில் மக்களுக்கு எந்த பிரச்னைகள் வரும் போதும் அவர்கள் வருவதில்லை.

ஆகவே, நுவரெலியா மாவட்டத்தில் எம்முடைய பிரதிநிதித்துவம் பாதுகாக்கப் பட வேண்டும் என்றால் உங்களுடைய வாக்குகள் உறுதுணையாக இருக்க வேண்டும். தற்போதய அரசாங்கத்துக்கு 48 சதவீதமானோர் வாக்களித்துள்ளனர். ஏனைய 52 சதவீதமானோர் அரசாங்கத்துக்கு எதிராகவே செயல்படுகின்றனர்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.10.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஐப்பசி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# விக்னேஸ்வரனிடம் ஒரு வேண்டுகோள்

தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் நிகழ்வு யாழ். நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அந்த கட்சியின் செயலாளர் நாயகம் சி.வி. விக்னேஸ்வரன் நீண்டகாலமாக சர்ச்சைக்குரியதாக இருந்துவரும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் குறித்து கருத்து தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களுக்கு 13ஆவது திருத்தம் அவசியமில்லை. அவர்களின் பொருளாதார பிரச்னைகளுக்கே தீர்வு அவசியமாகிறது. தமிழ் அரசியல் வாதிகள்தான் தங்களது அதிகாரத்தை தக்கவைப்பதற்காக 13ஆவது திருத்தத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கடந்த வாரம் தனியார் தொலைக்காட்சி சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியது தொடர்பாக விமர்சனங்கள் கிளம்பியிருக்கும் நிலையில் வட மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான விக்னேஸ்வரன் இந்த கருத்தைக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

13ஆவது திருத்தம் இனப்பிரச்னைக்கு ஒருபோதும் நிரந்தர தீர்வாக அமையப் போவதில்லை. ஆனால், தற்போது கையில் இருக்கின்ற அந்த திருத்தத்தையும் பறிகொடுத்துவிட்டு ஜே.வி.பி.யினர் கூறுவது போன்று சகல சமூகத்தவர்களும் சமமானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டுபோவது ஆபத்தானது என்பதே முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரின் கருத்து.

13 வது திருத்தத்தைப் பற்றிய விமர்சனங்கள் ஒருபுறமிருக்க, தற்போது கையில் இருக்கின்ற அந்த திருத்தத்தை பறிகொடுத்துவிடக் கூடாது என்று அவர் கொண்டிருக்கும் அக்கறையே முக்கியமானது. 13ஆவது திருத்தம் இன்று நேற்று வந்ததல்ல, மூன்றரை தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அந்த திருத்தம் உருப்படியான முறையில் நடைமுறைப்படுத்தாமல் இருப்பதை அந்தக் காலப்பகுதியில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் உறுதி செய்துகொண்டன.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளை (தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர) பொறுத்தவரை, 13ஆவது திருத்தம் இனப்பிரச்னைக்கு தீர்வு அல்ல என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும் நீண்டகால அடிப்படையிலான நிரந்தர தீர்வை நோக்கிய பயணத்தின் ஆரம்பக்கட்டமாக அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கொழும்பு அரசாங்கங்களை கோருவதுடன் அவர்களுக்கு நெருக்குதலை கொடுக்குமாறு இந்தியாவையும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றன.

ஆனால், அந்த திருத்தத்தை பறிகொடுப்பது ஆபத்தானது என்பதை வெளிப்படையாகக் கூறுவதில்லை. விடுதலை புலிகள் அந்த திருத்தத்தை எதிர்த்ததால் அந்த நிலைப்பாட்டுக்கு மாறாக மக்கள் மத்தியில் கருத்தைக் கூறாமல் இருப்பதை ஒரு 'புனித கடமையாக' இந்த தமிழ்க் கட்சிகள் பேணி வந்திருக்கின்றன. தமிழ் மக்களிடம் சமஷ்டி தீர்வு குறித்து பேசுவதில்தான் தமிழ் அரசியல்வாதிகள் அக்கறை காட்டுவார்கள். அதுவும் தேர்தல் காலம் என்றால் ஒருபடி உச்சம்.

13ஆவது திருத்தத்தை முதற்படியாக வைத்து அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கிய பயணத்தைச் செய்வதே விவேகமானதும் தற்போதைய நிலையில் நடைமுறைச் சாத்தியமானது என்பதையும் அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு நாளில் செய்து முடித்து விடகின்ற காரியம் அல்ல, அது படிப்படியான ஒரு செயன்முறை என்பதையும் தமிழ் மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்கு தமிழ்க்கட்சிகள் தற்போதைய பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களை பயன்படுத்த வேண்டும்.

எத்தனை கூறுகளாக பிரிந்து தமிழ்க்கட்சிகள் போட்டியிட்டாலும், இடைக்கால ஏற்பாடாக 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதை வலியுறுத்துவதற்கு தங்களுக்கு தமிழ் மக்கள் ஆணை தந்திருக்கிறார்கள் என்று தென்னிலங்கைக்கு கூறுவதற்கு பாராளுமன்ற தேர்தலை ஒரு மூலோபாய வாய்ப்பாக பயன்படுத்துவது விவேகமானதாக இருக்கும். 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை என்ற ரில்வின் சில்வா போன்றவர்களின் கருத்தை தமிழ் மக்களின் வாக்குகள் மூலமாகவே நிராகரிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

கையில் இருப்பதை பறிகொடுக்கக் கூடாது என்ற அக்கறையை வெளிப்படுத்தியிருக்கும் விக்னேஸ்வரன் அவர்களே அந்த பிரசாரத்துக்கு முன்னோடியாக செயற்பட்டால் என்ன?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# மிகமுக்கியமான ஆவணங்களை கையளிக்க கம்மன்பில முயற்சி

கொழும்பு, ஒக். 20

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தன்னிடமுள்ள மிக முக்கியமான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான ஆவணங்களை கையளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்திப்பதற்கு அனுமதி கோரியுள்ளதை தொடர்ந்து உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் குறித்த ஆவணங்களை மறைத்த விவகாரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அடிப்படையில் மிகவும் முக்கியமான ஆவணங்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு தயாரில்லை எனத் தெரிவித்துள்ள உதய கம்மன்பில இதனால் அமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின்னர் அமைச்சருக்கு குறுஞ்செய்தியை அனுப்பியதாகவும் அதற்கும் பதில் இல்லை என கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அவரை தொடர்புகொள்வதற்கான அனுமதியை கோரி பதிவுத் தபால் மூலம் கடிதமொன்றை அனுப்பினேன். என்னிடம் உள்ள ஆவணங்களை பொறுப்பான முறையில் கையளிக்க விரும்புகின்றேன் என கம்மன்பில விளக்கமளித்துள்ளார். (எ)

# மழைக்காலங்களில் கீரைகளை உட்கொள்வதைத் தவிர்க்கவும்

ஊட்டச்சத்து நிபுணர்கள் அறிவுறுத்தல்

கொழும்பு, ஒக். 20

வெள்ளம் படிப்படியாகக் குறைவடைந்தாலும் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் உள்ள நிலத்தில் விளையக்கூடிய கீரை வகைகளை உண்பதைத் தவிர்க்குமாறு ஊட்டச்சத்து நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

"கடும் மழை காரணமாக கழிவு நீர் வெள்ளத்தில் கலந்து நிலத்தில் தேங்குவதால் நிலத்தில் விளையும் கீரை வகைகளை உண்பது மிகவும் ஆபத்தானதாகும்.

இதனால், மழை வெள்ளம் குறையும் வரை அகத்தி, முருங்கை போன்ற கீரை வகைகளை மாத்திரம் உண்பது சிறந்ததாகும்.

மேலும், கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளதால், இயன்றவரை கொதித்து ஆறிய நீரை பருக வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# 39 வருடகால சாதனையை முறியடித்த வீராங்கனை

கொழும்பு, ஒக். 20

இலங்கையின் இளம் தடகள வீராங்கனை தருஷி அபிஷேகா 39 வருடங்கள் பழமையான கனிஷ்ட (20 வயதுக்குட்பட்ட) தடகள சாதனையை நேற்று முறியடித்துள்ளார்.

கொழும்பு சுகததாஸ மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலை தடகளப் போட்டியில் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியை 4 : 29. 99 நிமிடங்களில் நிறைவு செய்ததன் மூலம் அவர் இந்த தனித்துவமான சாதனையை படைத்துள்ளார்.



1985 ஆம் ஆண்டு தம்மிகா மெனிகே 4: 35. 7 வினாடிகளில் படைத்த சாதனையை 16 வயது தருஷி இவ்வாறு முறியடித்தார்.

தருஷி கம்பளை விக்கிரமபாகு மத்திய மகா வித்தியாலய மாணவியாவார். (எ)

# 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான 10 கிலோ ஐஸ் போதைப்பொருள் மீட்பு

கொழும்பு, ஒக். 20

10 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் மலேசியாவிலிருந்து வருகை தந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 250 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்புச் சுரண்டல் ஒரு தொடர் நிகழ்வு

மா. ராமச்சந்திரன்



சமையல் அறையில் பாத்திரங்கள் அடுக்கும் மர அலமாரியில் இருந்த பழுதைச் சரி செய்வதற்கு இரண்டுபேர் வந்திருந்தனர். சின்ன வேலைதான். ஆனாலும் இரண்டு பேர் வந்தால்தான் முடியும் என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு மணி நேரத்தில் வேலை முடிந்துவிட்டது.

சம்பளமாக ரூபாய் ஐயாயிரம் கேட்டார் அவர்களுள் வயதில் பெரியவனாகத் தெரிந்த நபர். வெகு தூரத்தில் இருந்து தன்னுடைய இருசக்கர மோட்டார் வாகனத்தில் வந்திருப்பதாகவும் சொன்னார். அந்த 'பைக்' அவர் கையாளாகக் கூட்டிவந்த இளைஞருடையது என்பது முதலிலேயே எனக்குத் தெரியும்.

ஒரு நபருக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் கேட்கிறார்கள் என்று எனக்குள்ளேயே கணக்கிட்டுக் கொண்டு, வண்டிக்கு பெட்ரோல் போட ஒரு ஆயிரம் ரூபாய் வைத்துக்கொள்ளுங்கள் என்று நானாகவே சேர்த்துச் சொல்லி, ஆறாயிரம் ரூபாயை பெரியவரிடம் கொடுத்தேன்.

அவரும் இளைஞனிடம், 'பெட்ரோல் போட ஆயிரம் ரூபாய் வைத்துக்கொள்' என்று, சொல்லி, இரண்டாயிரம் ரூபாயை அவனிடம் நீட்டினார். அவனும் எதுவும் சொல்லாமல் அந்த இரண்டாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டான். அந்த வகையில் பார்த்தால் அவனுக்குச் சம்பளம் இரண்டாயிரம் ஆயிரம் ரூபாய்தான். மீதி பெரியவரின் சட்டைப் பைக்குள் போனது.

இத்தனைக்கும் அந்த இளைஞன்தான் எல்லா பழுது பார்க்கும் பணிகளையும் செய்தான். மூத்தவர், 'அப்படி, இப்படி' என்று மேல்நோட்டம் பார்த்து, சொல்லிக் கொண்டு வேலையை வாங்கிக் கொண்டிருந்தாரே தவிர ஒரு ஆணியைக்கூட முறுக்கவில்லை. அப்படிப் பார்த்தால் ஊதியமாக வாங்கிய பணத்தில் பாதியை இளைஞனுக்குத்தான் கொடுத்திருக்க வேண்டும். அதுதான் நியாயம். அப்படி சரிபாதியாகக் கொடுக்காவிட்டாலும் கூட, சற்று அதிகமாகவாவது கொடுத்திருக்க வேண்டும். ஆனால் மூத்தவர் அப்படிக் கொடுக்கவில்லை. கடுமையாக உழைப்பை வாங்கிவிட்டு, குறைவாகக் கூலி கொடுத்தது உழைப்புச் சுரண்டலாக எனக்குப் பட்டது.

உழைப்புச் சுரண்டலில் தினக்கூலி தொழிலாளர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். இருந்தாலும் ஊதியச் சுரண்டல், அறிவுச் சுரண்டல் என்று எல்லா நிலைகளிலும் இந்த உழைப்புச் சுரண்டல் அதிகமாக இருக்கத்தான் செய்கிறது.

ஒரு வேலையில் நிபுணத்துவம் பெற்று, உயர் நிலைக்கு வளர்ந்துவிட்டால் உழைப்பைச் சுரண்டும் தன்மையும் கூடவே வளர்ந்துவிடுகிறது.

முதலாளி என்னும் அதிகாரவர்க்கம்தான் வேலை அதிகம் வாங்கி, கூலி குறைவாகக் கொடுத்து உழைப்புச் சுரண்டல் செய்வார்கள் என்பதுதான் முன்பெல்லாம் குற்றச் சாட்டாக இருக்கும். இப்போது சக தொழிலாளர்கள் இடையிலேயே சுரண்டும் போக்கு அதிகரித்துவிட்டது. கட்டடத் தொழில், வீடு பழுதுப் பணிகள், விவசாய வேலை என்று பல நிலைகளிலும் இத்தகைய உழைப்புச் சுரண்டல் போக்கு உள்ளதை அறிய முடிகிறது.

பாமரர்கள் தொழிலாளர்கள் மட்டும்தான் உழைப்புச் சுரண்டலால் பாதிக்கப்படுகிறார்களா என்றால் அதுதான் இல்லை. படித்த பணியாளர்களின் உழைப்பைச் சரண்டும் அவலமும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

ஊதியச் சுரண்டல், அறிவுச் சுரண்டல் என்று இந்த உழைப்புச் சுரண்டலால் பெரிதும் பாதிக்கப் படுவது 'ஜூனியர்' எனப்படும் இளையவர் அல்லது புதியவரேயாகும். ஆனாலும் அவர்கள் அதனைப் பற்றி பெரிதும் கவலைப்படுவதில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது - தொழிலைத் தெரிந்து கொள்வதற்கு அல்லது துறை சார் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்பு நழுவி விடக் கூடாதே என்று கருதிக் கொள்வதுதான் அந்தக் காரணமாகும்.

ஏனெனில் முறைசாரா தொழில் அமைப்பில் மூத்தவரிடம் (சீனியர்) இருந்துதான் 'முறையான', முழுமையான அறிவைப் பெற முடியும் என்று நம்புவதாலும், அமைப்புச் சாரா தொழிலாளர்கள் தங்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்காமல் போய்விடும் என்று அச்சப்படுவதாலும் உழைப்புச் சுரண்டல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளானவர்கள் தம் தொழிலில் உயர்வடைந்துவிட்டால் உழைப்புச் சுரண்டல் நடைமுறையைத் தம் வசப்படுத்திக் கொள்கின்றனர். ஏனெனில் அதிலொரு கௌரவம் இருப்பதாகக் கருதுகின்றனர். இப்படியாக, உழைப்புச் சுரண்டல் என்பது ஒரு தொடர் நிகழ்வாக, கொடுஞ்சுழலாக நீள்கிறது.

# இந்தவார ராசிபலன் 20.10.2024 - 26.10.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 03

நல்ல நேரம்: 9.02 - 10.32 ராகு காலம் : 04.32 - 06.02 திதி : திருதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு கிடைக்கும். காரியத் தடைகள் ஏற்படும். சுறுசுறுப்பு இல்லாத நிலை உருவாகும். பக்தி, ஞானம் மேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் தங்கள் புகழும் மரியாதையும் கூடும். பயணத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல நண்பர்கள் மற்றும் உறவினர் அனுசரணை இருக்கும். அரசு வகை இலாபங்கள் ஏற்படும். சிலருக்கு புத்திர பாக்கியம், புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். குடும்பத்தில் மன அமைதி பெற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. வெளியூர் அலைச்சல்கள் அதிகரிக்கும். ஞானிகளின், பெரியோர்களின் சந்திப்பால் மன அமைதியும், சந்தோஷமும் பெருகும். சிலருக்கு எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமாகமும், குஷியாகவும் இருக்கும். தங்கள் கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்களும் குறையும். தந்தை வழி உறவுகளால் வீண் செலவுகள் அதிகரிக்கலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமைகளை வெளிக் காட்டுவதின் மூலமாக அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நல்ல சேதிகள் நாடிவரும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரும். வாரத்தின், முதல்நாள் பயணத்தில் துன்பமும், பின்னர் வரும் நாட்களில் கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் எதிர்பாராத இனிய விருந்துகள், மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் ஏற்படும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள். அரசாங்கத்திடம் வேண்டப்பட்ட கோரிக்கைகள் தடங்கலின்றி நிறைவேறும். நல்லோர் சேர்க்கையால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல தேர்ச்சி ஏற்படும். சிலருக்கு உழைப்புக் குறைவானாலும் ஆதாயம் அதிகரிக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் இரண்டும் கலந்த வாரம். ஞானிகளின் உபதேசம் கேட்டு ம ம் ஞானத் தன்மைக்கு மாறும். அரசுப் பெண் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீண் கோபத்தால் விவேகத்தை இழக்காதீர்கள். மேடைப் பேச்சாளர்களுக்கு மேன்மையான நிலை ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிறப்பான காலம். அதன் காரணமாக வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருக்கும் கையிருப்புப் பணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை ஈடுபாடு இலாபம் பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்புத் தேவை. புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதினால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரரின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். ஏமாற்றத்தைத் தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாளித்து போவது சிறப்பு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்வுகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பொன் ஆபரணங்கள் விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். பக்தி மிக்க புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். மேம்படும் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவரகள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடுவதால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பூமி, வீடு ஆகியவற்றின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் பணவரவு அதிகரிக்கும். புதிய முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்து தொழிலை விருத்தி செய்வீர்கள். நீண்ட நாட்களாக வராத விருந்தினர்கள் வந்து விருந்தாடி மகிழ்வைத் தருவர் நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். பயணங்கள் இனிமை தரும். வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் கூட எளிதில் கைகூடும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் குடும்பத்தில் கலகங்களும், குழப்பங்களும் நிகழலாம். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லையே. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தானே வாழ்க்கை. பலநாள் கனவுகள் நனவாகும். பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. சிலருக்குப் பிறர் பொல்லாப்பின் காரணமாக பயம் தோன்றலாம். தெய்வபலம் இருப்பதினால் நேர்மை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றால், வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இனப்பிரச்னை தொடர்பில் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையானால் புதிய அரசியல் கலாசாரம் வெற்றுச் சுலோகமே!



வீரகத்தி தனபாலசிங்கம்







**மாற்றத்தைக் கொண்டுவரப்போவதாகவும் புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப்போவதாகவும் சூளுரைத்துக் கொண்டு ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் இனவாதிகள் காலங்காலமாக மக்களை தவறாக வழிநடத்துவதற்கு கூறிவந்த கருத்துக்களிலேயே நம்பிக்கை வைப்பதாக இருந்தால் மாற்றம் என்பதில் அர்த்தமில்லை.**

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு மாதம் நிறைவடையப் போகிறது. இந்த ஒருமாத காலத்தில் அவரும் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜனதா விமுக்தியின் (ஜே.வி.பி.) முக்கிய தலைவர்களும் ஆட்சி மாற்றத்துக்கு பிறகு இலங்கை அரசியல் நிலக்காட்சியில் காணப்படக்கூடியதாக இருக்கும் மாறுதல்கள் குறித்து பெருமையாக பேசுகிறார்கள். பல அரசியல்வாதிகள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாமல் விடுவதற்கு தீர்மானித்ததை ஜே.வி.பி.யின் தலைவர்கள் பெரிய ஒரு மாறுதலாக குறிப்பிடுகிறார்கள்.

தேர்தல்களில் தோல்வியடைந்தால் அல்லது இறந்து போனால் மாத்திரமே கடந்த காலத்தில் அரசியல்வாதிகள் ஓய்வுபெற்ற வரலாற்றைக் கொண்ட இலங்கை அரசியலில் ஓய்வு என்ற சொல்லை தேசிய மக்கள் சக்தியினால் இப்போது அறிமுகப்படுத்தக்கூடியதாக இருந்திருக்கிறது என்று கூறியிருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் தேர்தலில் இருந்து விலகியிருப்பது மக்கள் எதிர்பார்த்த மாற்றங்களில் ஒன்று என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, ஊழல்தனமான அரசியல்வாதிகளும் இனவாதிகளான அரசியல்வாதிகளும் தோல்வியை தவிர்ப்பதற்காக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாமல் விடுவதற்கு தீர்மானித்ததாகவும் அத்தகைய அரசியல்வாதிகள் வேட்பாளராக வருவதற்கு கூட நினைத்துப் பார்க்காமல் இருப்பதை உறுதிசெய்ததன் மூலம் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னதாகவே தேசிய மக்கள் சக்தி மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்டது என்றும் ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பிமால் இரத்நாயக்க கூறினார்.

"அநுரா குமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்ததன் மூலம் ஊழல்காரர்களினதும் இனவாதிகளினதும் அரசியலுக்கு முடிவு கட்டியதற்காக மக்களுக்கு நன்றி கூறுகிறோம். அந்த அரசியல்வாதிகள் தங்களுக்கு தோல்வி நிச்சயம் என்பதை அறிந்து தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை. திசாநாயக்கவுக்கு வாக்களித்த மக்கள் ஊழல்தனமான அரசியல்வாதிகளை அரசியலில் இருந்து அகற்றியதன் மூலம் மகத்தான சாதனை ஒன்றைப் படைத்திருக்கிறார்கள்" என்று இரத்நாயக்க மேலும் கூறினார்.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களில் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. இலங்கை அரசியலில் முன்னென்றுமே இவ்வாறு நடந்ததில்லை. அவர்களில் முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் அடங்குகிறார்கள். சிலர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

தங்களது தீர்மானத்துக்கு இந்த அரசியல்வாதிகள் பல்வேறு காரணங்களை கூறுகின்ற போதிலும், மக்கள் தங்களை நிச்சயம் நிராகரிப்பார்கள் என்ற பயம் காரணமாகவே அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஓய்வுபெறவேண்டிய வயதில் உள்ள சில அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, இளையவர்களும் கூட தங்களது கட்சிகளின் தேசியப்பட்டியலுக்குள் புகுந்துகொண்டார்கள்.

சில அரசியல்வாதிகள் தங்களது வாரிசுகளை தேர்தலில் போட்டியிட வைத்துவிட்டு தாங்கள் ஒதுங்கிக்கொண்டார்கள். குடும்ப அரசியலை ஒழிப்பது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல என்பதை இது வெளிக்காட்டுகிறது. கடந்த இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக இலங்கையில் குடும்ப ஆதிக்க அரசியலின் பிரத்தியேகமான அடையாளமாக விளங்கிவந்த ராஜபக்சாக்கள் சிங்கள மக்கள் தங்களைப் பற்றி உண்மையில் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

ராஜபக்ச சகோதரர்களில் எவருமே பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ச நேரடியாக போட்டியிடாமல் தேசியப் பட்டியலுக்குள் பாதுகாப்பு தேடிக்கொண்டார்.

அரசியலில் இருந்து தற்காலிகமாகவே விலகியிருப்பதாக கூறியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தங்களது கட்சி எளிதாக வெற்றிபெறும் என்று கூட நம்பிக்கை வெளியிட்டிருக்கும் விசித்திரத்தைக் காண்கிறோம். விடுதலை புலிகளை தோற்கடித்து போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக தங்களை சிங்கள மக்கள் நெடுகவும் ஆதரிப்பார்கள் என்றும் தங்களது முறைகேடுகளைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்றும் ராஜபக்சக்கள் நம்பிக்கையை வளர்த்திருந்தார்கள். ஆனால், அவர்களின் தவறான ஆட்சியே இறுதியில் குடும்ப அரசியல் ஆதிக்கத்துக்கு எதிராகவும் பிரதான அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும் இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் மக்கள் கிளர்ந்தெழுவதற்கும் பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்துக்கு வெளியில் உள்ள ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கும் வழிவகுத்தது.

2022 மக்கள் கிளர்ச்சி உச்சக்கட்டத்தில் இருந்தபோது பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ச விலகிய பிறகு பாராளுமன்றத்தில் ஒரு தடவை உரையாற்றிய அவரது மூத்த சகோதரரும் முன்னாள் சபாநாயகருமான சமால் ராஜபக்ச, தனது சகோதரர் ஜனாதிபதியாக இரண்டாவது பதவிக்காலம் முடிவடைந்த போது அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்று கூறினார். சகோதரரின் ஆலோசனையை மகிந்த ராஜபக்ச இன்று வரை கருத்தில் எடுக்கவில்லை.

ராஜபக்சக்களும் விமல் வீரவன்ச போன்ற அரசியல்வாதிகளும் பாராளுமன்ற தேர்தலில் இருந்து ஒதுங்கியிருப்பதற்கு எடுத்த தீர்மானத்தையே ஜே.வி.பி.யின் தலைவர்கள் இனவாத அரசியலின் முடிவாகக் கூறுகிறார்கள் என்றே தோன்றுகிறது. ஆனால், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக இடையறாது பேசிவரும் உதய கம்மன்பில மற்றும் சரத் வீரசேகர போன்ற இனவாத அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இனவாத அரசியல்வாதிகள் தேர்தல்களில் போட்டியிடாமல் இருப்பதோ அல்லது அரசியலில் இருந்து ஒதுங்குவதோ இனவாத அரசியலின் முடிவாக அமைந்துவிடப் போவதில்லை. இனவாத அரசியலின் வெளிப்பாடுகளான அவர்கள் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக விதைத்த நச்சுத்தனமான சிந்தனைகள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளுக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கும் எதிராக உணர்வுகள் ஆழமாக வேரூன்றியிருக்கின்றன. அந்த துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தில் ஓரளவுக்கேனும் மாற்றம் ஏற்படாத வரையில் புதிய அரசியல் கலாசாரத்தைப் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளுக்கும் அபிலாசைகளுக்கும் எதிராக நெடுகவும் நியாயமற்ற ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது பொருளாதார நெருக்கடி உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கும் தடையாக இருந்துவருகிறது என்ற புரிதலை இனிமேலாவது பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கான அரசியல் துணிவாற்றல் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கு வரவேண்டும்.

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு இதுகாலவரையில் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்த ஒரு கசப்பான வரலாற்றை ஜே.வி.பி. கொண்டிருக்கிறது.

1957 பண்டா - செல்வா ஒப்பந்த மும் 1965 டட்லி -- செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்திட்டபோது ஜே.வி.பி. தோன்றியிருக்கவில்லை. ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கம் 1981 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய மாவட்ட சபைகள் தொடக்கம் இந்தியாவின் தலையீட்டையடுத்து அதே ஜெயவர்தன அரசாங்கம் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் ஊடாக கொண்டுவந்த மாகாண சபைகள் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகள் வரை சகல அரசியல் தீர்வு முயற்சிகளையும் ஜே.வி.பி. எதிர்த்தது. அதன் அரசியல் அகராதியில் அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமிருந்ததில்லை.

அரசைக் கவிழ்ப்பதற்காக இரு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்த ஜே.வி.பி.யின் வன்முறைக் கடந்த காலத்துக்கு அதை பணயக்கைதியாக வைத்திருக்காமல் தென்னிலங்கை மக்கள் மாற்றத்துக்கான தங்கள் வேட்கையில் அதை ஆட்சியதிகாரத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதேபோன்று தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ஜே. வி.பி.யினர் இதுகாலவரையில் கொண்டிருந்த எதிர்மறையான நிலைப்பாடுகளுக்கு அவர்களை பணயக் கைதியாக வைத்திருக்காமல் அவர்களுக்கு சிறுபான்மைச் சமூகங்கள் நேசக்கரம் நீட்டுவதற்கான வழியை அதன் தலைவர்கள் திறந்துவிடவேண்டிய காலம் வந்துவிட்டது. பெரும்பான்மைச் சமூகத்தின் நம்பிக்கைக்குரியவர்களாக ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் மாறியிருக்கும் தற்போதைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை இனப்பிரச்சினை தொடர்பிலும் தென்னிலங்கையில் ஆரோக்கியமான சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தவேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்க வெற்றிபெற்று பதவிக்கு வந்ததை தொடர்ந்து இனப்பிரச்சினை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டில் ஓரளவுக்கேனும் நெகிழ்ச்சித்தன்மை ஏற்படக்கூடும் என்று கணிசமான ஒரு பிரிவினர் எதிர்பார்க்கிறார்கள். பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் என்ற ஆர்வம் வடக்கு, கிழக்கில் ஒரு கணிசமான பிரிவினர் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், தங்களிடம் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறுவதைப் போன்று ஜே.வி.பி.யின்


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் எவ்வாறு நடைபெறுகின்றது உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்கள் ?

வித்தகர் விபுலமாமணி
வி.ரி. சகாதேவராஜா
(காரைதீவு)

இலங்கையில் பாராளுமன்ற பொதுத்
தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்
துவ (PR System) முறையில் நடைபெறு
கின்றது. அதாவது தேர்தலில் போட்டி
யிடுகின்ற கட்சிகள் அல்லது சுயேட்சைக்
குழுக்கள் பெறுகின்ற வாக்கு வீதத்திற்கு
ஏற்ப ஆசனங்களை, கணித உத்திகளை
பயன்படுத்தி பிரித்து வழங்குகின்ற
முறையாகும். இதனடிப்படையில்
இலங்கை பாராளுமன்றத்திற்கு 196
உறுப்பினர்கள் தேர்தல் மூலமும், 29
உறுப்பினர்கள் தேசிய பட்டியல் முறை
மூலமும் தெரிவு செய்யப்படுகின்றனர்.



**மாவட்ட முறைமை**

தேர்தல் மாவட்ட அடிப்படையி
லேயே தேர்தல் நடைபெறுகின்றது.
இலங்கையில் மொத்தமாக 25 நிருவாக
மாவட்டங்கள் உள்ளபோதிலும் அரசி
யல் யாப்பின் 96ஆவது உறுப்புரைக்கு
அமைய 22 தேர்தல் மாவட்டங்களாக
வரையறை செய்யப்பட்டுள்ளன. அதா
வது 25 நிருவாக மாவட்டங்களில் யாழ்
நிருவாக மாவட்டமும் கிளிநொச்சி
நிருவாக மாவட்டமும் இணைக்கப்பட்டு
யாழ் தேர்தல் மாவட்டமாகவும் முல்
லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய
நிருவாக மாவட்டங்கள் இணைக்கப்ப
ட்டு வன்னி தேர்தல் மாவட்டமாகவும்
கணிக்கப்பட்டு அம்பாறை நிருவாக
மாவட்டம் திகாமடுல்ல தேர்தல்
மாவட்டமாக அழைக்கப்பட்டு 22
தேர்தல் மாவட்டங்களாக வரையறை
செய்யப்பட்டுள்ளன.

**ஆசனப் பங்கீடு**

மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்
கீடு 196 ஆசனங்கள் 22 தேர்தல் மாவட்
டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
இந்த அடிப்படையில் 160 ஆசனங்கள்
பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின்
தொகைகளின் அடிப்படையிலும் மிகுதி
36 ஆசனங்களும் மாகாண பரப்பளவு
அடிப்படையில் அதாவது 1 மாகாணத்
திற்கு 4 ஆசனங்கள் என்ற அடிப்படை
யில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

வாக்காளர்களின் தொகையின் அடிப்
படையில் 160 ஆசனங்களை பகிர்ந்தளிக்
கின்றபோது 22 தேர்தல் மாவட்டங்களி
லும் பதிவு செய்யப்பட்ட மொத்த
வாக்காளர் தொகையினை 160 என்ற
எண்ணிக்கையால் வகுக்கின்றபோது
வருவது தகைமை பெறும் தொகையா
கும். இத் தகைமை பெறும் தொகையி
னைக் கொண்டு ஒவ்வொரு தேர்தல்
மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட
வாக்காளர் தொகையை தனித்தனியே
பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்
பட்ட தொகையே மாவட்டங்களுக்கான
சனத்தொகை அடிப்படையிலான
ஆசனங்களாக இருக்கும். இருப்பினும்
160 ஆசனங்களும் முழுமையாக
பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சியிருக்கும்
ஆசனங்கள் தேர்தல் மாவட்டங்களில்
பதிவு செய்யப்பட்ட மிகுதி வாக்காளர்
தொகையில் கூடுதலான தொகையினைக்
கொண்ட மாவட்டங்களுக்கு ஒதுக்கப்
படும். இவ்வாறு பெறப்படும் சனத்
தொகை அடிப்படையிலான ஆசனங்க
ளும், மாகாண பரப்பளவு அடிப்படை
யில் பெறப்படும் ஆசனங்களும் கூட்டப்
பட்டு ஒரு தேர்தல் மாவட்டத்துக்கான
இறுதி ஆசன ஒதுக்கீடாக அமையும்.

**வேட்புமனு தாக்கல் செய்யும் முறை**

பட்டியல் முறை ஆல் கீழேயே
வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்
டும். தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள்
ஆணையாளரால் ஒவ்வொரு தேர்தல்
மாவட்டத்திற்கான ஆசனத்தொகை
வர்த்தமானிப்படுத்தப்படும். ஒவ்வொரு
வேட்புமனுவும் குறித்த மாவட்டத்துக்கு
என ஒதுக்கப்பட்ட ஆசன எண்ணிக்
கையையோடு 3 ஐ கூட்டிவரும் எண்
ணிக்கையைக் கொண்டதாக பட்டியல்
தயார் செய்யப்பட்டு வேட்புமனு
தாக்கல் செய்யப்பட வேண்டும். வேட்பு
மனுப் பட்டியலில் குறித்த எண்ணிக்
கையில் குறைந்த அல்லது கூடிய
எண்ணிக்கையினைக் கொண்டிருப்பின்
அப் பட்டியல் நிராகரிக்கப்படும்.

**வாக்களிக்கும் முறை**

விகிதாசாரப் பட்டியல் முறையின்
கீழ் வாக்களிப்பது சற்றுச் சிரமமானது.
வாக்காளன் தமது வாக்குகளை அளிக்
கும்போது முதலில் தான் விரும்பும்
கட்சிக்கு அல்லது சுயட்சைகுழுவுக்கு
வாக்களிக்க வேண்டும். இவ் அடிப்படை
வாக்கு கட்டாயமானதாகும். அத்தோடு
அப் பட்டியலில் தான் விரும்பும் 3 வேட்
பாளர்களுக்கு விருப்பு வாக்கினை
அளிக்கலாம். மேலும் அப்பட்டியலில்
தான் விருப்பு வாக்கினைப் பயன்படுத்து
கின்றபோது இலக்கங்களுக்கு மேலே
புள்ளடியிட்டுக் காட்ட வேண்டும். 3
விருப்பு வாக்குகளும் வாக்குச் சீட்டில்
அளிக்கப்பட வேண்டும் என்பது கட்
டாயமில்லை. விரும்பினால் ஒரு இலக்
கத்துக்கு மட்டும் அல்லது இரு
இலக்கங்களுக்கு மட்டும் அல்லது
மூன்று இலக்கங்களுக்கும்
புள்ளடியிட்டுக் காட்டலாம். அல்லது
எந்தவொரு இலக்கத்துக்கும்
புள்ளடியிடாது விடலாம். ஆனால் தான்
விரும்பும் கட்சி அல்லது
சுயேட்சைக்குழுவின் சின்னத் துக்கு
நேரே புள்ளடியிட்டுக் காட்டுவது
கட்டாயமாகும்.

**நிராகரிப்பு சந்தர்ப்பம்**

கட்சியின் அல்லது சுயட்சைகுழுவின்
சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டுக்
காட்டாது விருப்பு வாக்குகளுக்கு
மட்டும் புள்ளடியிடப்படின் அவ்
வாக்குகள் நிராகரிக்கப்படும். ஒன்றுக்கு
மேற்பட்ட கட்சியின் அல்லது
சுயேட்சை குழுவின் நேரே புள்ளடியிடப்
பட்டிருப்பின் அவ்வாக்கும் நிராகரிக்கப்
படும். கட்சிக்கு அல்லது சுயட்சைகுழு
வுக்கு இடும் வாக்கானது கட்சி அல்லது
சுயேட்சைக் குழுக்கள் பெறுகின்ற ஆச
னத்தை தீர்மானிக்கும். விருப்பு வாக்கு
கள் இவற்றின் மூலம் பெறப்பட்ட
ஆசனத்துக்கான பிரதிநிதி யார்?
ஏன்பதை தீர்மானிக்கும்.

**வாக்கு கணிப்பீடு**

வாக்கு கணிப்பீடானது பல்வேறு
கணித உத்திகளின் பிரயோகங்களை
பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.
வாக்கு கணிப்பீடு தேர்தல் மாவட்ட
ரீதியாக தனித் தனியாக இடம் பெறும்.
அப்போது முதலில் இரு விடயங்கள்
கவனத்தில் கொள்ளப்படும். அத்தேர்தல்
மாவட்டத்தில் கூடிய வாக்கினைப்
பெற்ற கட்சி அல்லது சுயட்சைகுழு
மாவட்டத்தில் குறைந்த வாக்கினைப்
பெற்ற கட்சி அல்லது சுயேட்சை குழுக்
கள், (5 வீதத்திற்கு குறைந்த) எவை என
அறியப்படும். இதன்படி கூடிய வாக்
கினை பெற்ற கட்சி அல்லது சுயேட்சைக்
குழுவுக்கு ஒரு சன்மான - போனஸ்
ஆசனம் வழங்கப்படும். குறைந்த
வாக்கினைப் பெற்ற கட்சி அல்லது
சுயேட்சை குழுக்கள் அம் மாவட்டத்தில்
அளிக்கப்பட்ட செல்லுபடியான
வாக்குகளில் 5 வீதத்திற்கு குறைந்த
வாக்கு (வெட்டுப்புள்ளி) பெற்ற
கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும்
அத் தேர்தல் மாவட்டத்தில் எந்தவொரு
ஆசனத்தையும் பெற முடியாது
என்பதுடன் போட்டியில் இருந்து
நீக்கப்படும்.

அப்போது போட்டியிலிருந்து
நீக்கப்பட்டவர்களது வாக்குகள் அம்
மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த
செல்லுபடியான வாக்கிலிருந்து கழிக்
கப்படும். அவ்வாறு கழிக்கப்பட்டு வரும்
மிகுதியான தொகை தொடர்புடைய
வாக்குகள்- இசைவான வாக்குகள் என
அழைக்கப்படும். இத் தொடர்புடைய்
வாக்குகளை அம் மாவட்டத்தில்
தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆசன
எண்ணிக்கையிலிருந்து ஒன்றினை
கழித்து வரும் எண்ணிக்கையினால்
பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்
பட்டு வரும் தொகை விளைதொகை -
முடிவெண் தகுதிகாண் வாக்கு எனப்
படும்.

விளைதொகையினைக் கொண்டு
தனித்தனியே ஒவ்வொரு கட்சி அல்லது
சுயேட்சை குழுக்கள் பெற்ற வாக்குகளை
பிரிக்க வேண்டும் (5 வீதத்திற்கு குறைந்த
வாக்குகளைப் பெற்ற பட்டியல்கள்
தவிர) இவ்வாறு பிரிப்பதால் வரும்
எண்ணிக்கை பட்டியலுக்கான ஆசனங்
களாகும். இந்நிலையில் குறித்த ஆசனங்
களில் ஏதேனும் ஆசனங்கள் வழங்கப்
படாது எஞ்சியிருக்குமானால் அவை
பட்டியல்களின் பெரும்பான்மை மிகுதி
வாக்குகளின் முன்னுரிமை அடிப்படை
யில் அவ்வாசனம் வழங்கப்படும். ஒவ்
வொரு கட்சி - சுயேட்சைக் குழுக்கள்
வெற்றி பெற்ற ஆசனங்கள் கணிப்பிடப்
பட்ட பின்னர் அவ்வாசனத்துக்குரிய
பிரதிநிதி யார்? என்பது விருப்பு வாக்கு
களின் முன்னுரிமை அடிப்படையில்
தீர்மானிக்கப்படும். இங்கு இடைத் தேர்
தல்கள் நடைபெறாது ஒரு வெற்றிடம்
ஏற்படுமாயின் அடுத்த முன்னுரிமை
அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு
செய்யப்படுவர்.

**தேசிய பட்டியல் ஆசன ஒதுக்கீடு**

தேசிய பட்டியல் முறை என்பது
பொதுத்தேர்தல் இடம்பெற்று முடிந்த
தும் தேசிய ரீதியாக கட்சி அல்லது
சுயேட்சைகுழு பெறுகின்ற வாக்குகளை
அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்
கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்கின்ற
முறையே இதுவாகும். இதன் மூலம் 29
நாடாளுமன்ற உறுப்பினர்களை
மேலதிகமாக சேர்த்துக் கொள்ளும் ஓர்
வழிமுறையாக இது அமைந்துள்ளது.
அதாவது இலங்கை முழுவதும்
அளிக்கப்பட்ட கட்சிகள் பெற்ற மொத்த
செல்லுபடியான வாக்குகள் கவனத்தில்
கொள்ளப்படும். இதனை தேசிய ரீதியாக
பெற்ற மொத்த வாக்கு எனலாம். இம்
மொத்த வாக்குகளை 29 என்ற எண்
ணால் பிரிப்பர். இவ்வாறு பெறும்
தொகை தகைமைபெறும் தொகை (ஒரு
தேசிய பட்டியலுக்கான ஆசனத்தை
பெறும் வாக்கு) எனலாம். இத் தகைமை
பெறும் தொகையினைக் கொண்டு
ஒவ்வொரு கட்சியும் தேசிய ரீதியாக
பெற்ற வாக்குகளை தனித்தனியாக
பிரிப்பர். அப்போது ஒவ்வொரு கட்சிக்
குமான தேசிய பட்டியல் ஆசனங்கள்
பெறப்படும்.

இந்த அடிப்படையில் எதிர்வரும்
நவம்பர் மாதம் 14 ஆம் தேதி நடை
பெறும் பாராளுமன்ற பொதுத் தேர்த
லும் நடைபெறும்.

வெற்றி பெறும் கட்சிகள் பிரதிநிதி
கள் ஆட்சி அமைக்கும் கட்சி தொடர்
பாக பொறுத்திருந்து பார்ப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரேயின்றி தனித்திருக்கும் தமிழரசு கூட்டமைப்புக்கு எவ்வாறு உரிமை கோருவது?

## ஜனாதிபதித் தேர்தலில் சங்கை எதிர்த்துவிட்டு இன்று சங்குக்காக அழுது புரள்வதா?

**பனங்காட்டான்**



TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று ஒரு மாதம் முடிவடையும் வாரம் இது. புதிய ஜனாதிபதி சரியாக அவரது ஆசனத்தில் இருந்து எழும்வதற்கு முன்னரே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி விட்டாரென தோற்றவர்கள் குற்றப்பட்டியலை வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

ஒரு ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்களுக்கானது. ஆனால், நான்கு வருடங்கள் முடிந்து ஒரு மாதம் ஆவதற்குள் மூன்றாவது ஜனாதிபதியாக அநுர குமார திஸ்ஸநாயக்க பதவியேற்றார் என்றால், இலங்கையின் அரசியல் எவ்வாறு பயணிக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்தப் பயணத்தில் பொதுத்தேர்தலும் வந்துள்ளது. தமது கட்சியின் மூன்று எம்.பிக்களுடன் நாடாளுமன்றத்தில் எதனையும் செய்ய முடியாது என்பதால், பெரும்பான்மை பலத்தை வேண்டி பொதுத்தேர்தல் நடத்தும் தேவை புதிய ஜனாதிபதிக்கு எற்பட்டுள்ளது.

எப்படியாவது அவருக்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையை (113 ஆசனங்கள்) வழங்கக்கூடாதென்பதில் சஜித் பிரேமதாச அணி குறியாக உள்ளது. அடுத்த பிரதமராக சஜித் வருவாரென்ற இலக்கு இவர்களின் பரப்புரையில் முதலிடம் பெறுகிறது. ஐக்கிய தேசிய கட்சியும், பொதுஜன பெரமுனவும் இவ்விடயத்தில் சஜித் அணியுடன் மோதும் நிலையில் காணப்படவில்லையென்பது தெற்கின் அபிப்பிராயம்.

இருபத்தியிரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் அநுர குமாரவின் கட்சி போட்டியிடுகின்றது. தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் ஒரு டசினுக்கும் மேலான ஆசனங்களைப் பெற முடியுமென இவர்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்கு இயைவாக தமிழர் தரப்பு தேசியம், ஜனநாயகம் என்று மட்டும் இல்லாமல் பினாமிகளாக பெருமளவு சுயேச்சைகள் களமிறங்கியுள்ளன. இவர்கள் களம் இறக்கப்பட்டுள்ளனர் என்றும் சொல்லலாம்.

தமிழர்களின் தலைமைக் கட்சியென்று நீண்ட காலமாக மதிப்பு பெற்று வந்த தமிழரசுக் கட்சி மூன்றாக பிளவுபட்டிருப்பினும், தமிழரசின் ஆதரவாளர்களான வேறு பலர் வெவ்வேறு அணிகளிலும் போட்டியிடுகின்றனர். தலைவர் என்று ஒருவர் இல்லாத அந்தக் கட்சி குருவிச்சை, ஒட்டகம், பிசாசு என்ற பெயர்களின் பின்னால் அந்தரப்படுகிறது.

கட்சியின் புதிய தலைவராகத் தெரிவான சிவஞானம் சிறீதரன் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக அப்பதவியில் தொடர முடியாத நிலைமை. அதனால், கட்சியின் தலைவராகத் தொடர்ந்திருந்த மாவை சேனாதிராஜா தேர்தல் கால அதிருப்திகள் காரணமாக பதவியைத் துறந்து அறிக்கைகளுடன் அரசியல் நடத்துகிறார். இதனால் மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவ்வப்போது சில கூட்டங்களில் தலை காட்டுவது தெரிகிறது. அண்மையில் வைரலான காணொளி ஒன்றினால் இவர் நன்கறியப்பட்டுள்ளார். அறுந்துபோவான், குறுக்காலை போவான், பிசாசு என்று முறையே முன்னாள் தலைவரையும், பெருந்தலைவரையும், இன்று தலைமைப் பதவிக்கு ஓடித் திரிபவரையும் இவர் வர்ணித்திருந்ததை தவறான விடயம் என்று இதுவரை யாருமே கூறவில்லை.

அதேசமயம், பிசாசு என்று வர்ணிக்கப்பட்டவருடன் பொது நிகழ்வுகளில் இவர் தொடர்ந்து பங்குபற்றி வருவதைப் பார்க்கும்போது, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்த ஒரு விடயம் பளிச்சென நினைவுக்கு வருகிறது. "தேவைப்பட்டால் நான் பேயுடனும் சேருவேன்" என்ற ஜே.ஆரின் கூற்றையே சீ.வீ.கே.சிவஞானம் அவர்களும் பின்பற்றுகிறார் போலும் (பேயும் பிசாசும் ஒன்றுதான்). இதுதான் தமிழரசின் இன்றைய அலங்கோல நிலை.



தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் என்ற பதவிப் பெயருடன் தொடரும் சுமந்திரன் தேர்தல் கால நிகழ்வுகளில் தெரிவிக்கும் கருத்துகள் ஊடகங்களுக்கு ஊட்டச் சத்துள்ள தீனி. விளாசித்தள்ளும் இவரது கருத்துகள் இவரை நோக்கியே திரும்பித் தாக்குமென இவர் நினைப்பதில்லைப்போல் தெரிகிறது. அண்மையில் இவர் தெரிவித்த இரண்டு விடயங்களை உதாரணத்துக்குப் பார்க்கலாம்.

"கூட்டமைப்பின் பெயரை களவாடி உரிமை கோருபவர்கள், திருடர்கள் - கப்பம் பெற்றவர்கள் - கடத்தல்காரர்கள் - கொலையாளிகள். இவர்கள் திருந்தி விட்டனரென்றே சேர்த்துக் கொண்டோம்" என்ற சுமந்திரனின் பகிரங்க அறிவிப்புக்கு தாராளமாக பிரசித்தம் கிடைத்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது 2001ம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதி விடுதலைப் புலிகளின் நேரடிப் பங்களிப்பால் உருவாக்கப்பட்டது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய நான்கு அணிகளும் ஆரம்பத்தில் இதில் இணைக்கப்பட்டவர்கள். பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இக்கூட்டிலிருந்து வெளியேறியதையடுத்து அந்த இடத்துக்கு தமிழரசுக் கட்சி இணைக்கப்பட்டது. கூட்டமைப்பின் உருவாக்கத்தின்போது தமிழரசுக் கட்சியோ அதன் வீடு சின்னமோ இடம்பெறவில்லை.

2009 முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடினால் தமிழ்க் காங்கிரஸ் வெளியேறியது. செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடு வெளியேறினர். 2010 பொதுத்தேர்தலின் பின்னர் கட்சியின் தலைவராக அப்போதிருந்த சம்பந்தனால் தமிழரசுக் கட்சி ஊடாக தேசியப் பட்டியல் எம்.பியாக கொண்டு வரப்பட்டவர் சுமந்திரன். 2015 தேர்தலில் 58,043 வாக்குகள் பெற்ற இவர் 2020 தேர்தலில் 27,384 வாக்குகளை மட்டுமே பெற்றார். இதுவும்கூட சிறீதரனின் அணைவினால் பெற்றவை என்பது பகிரங்க ரகசியம்.

> **கூட்டமைப்புக்குள் பிந்தி வந்து சேர்ந்தவர் முந்தி வந்தவர்களை திருடர்கள் என்கிறார். அப்படியானால் அவர்களுடன் ஏன் இணைந்தார் என்பதற்கு பதில் என்ன? தனித்திருக்கும் தமிழரசுக் கட்சியை கூட்டமைப்பு என்று எவ்வாறு அழைக்க முடியும்? ஜனாதிபதித் தேர்தலில் சங்கை ஒழிப்பேன் என்று சபதமிட்டுத் தோற்றவர் இப்போது அதே சங்குக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்.**

இதனூடாக முக்கியமான ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ளலாம். 2001ல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது சுமந்திரன் எங்கிருந்தார் என்பது யாருக்கும் தெரியாது. 2001, 2004, 2010 தேர்தல்களின்போது கூட்டமைப்புக்காக இவர் பரப்புரை செய்தவரும் அல்ல. ஏதோவொரு காரணத்துக்காக சம்பந்தனால் இவர் தேசியப் பட்டியல் ஊடாக எம்.பியாக்கப்பட்டார் என்பதே வரலாறு.

அப்போது கூட்டமைப்பில் ஏற்கனவே இருந்த கட்சிகள் (சுமந்திரன் இன்று திருடர்கள், கொலைகாரர்கள் என்று பட்டம் சூட்டப்படுபவர்கள்) இவரது வரவை எதிர்க்கவும் இல்லை. ஆனால், சுமந்திரன் இப்போது கூறும் விடயங்களைப் பார்க்கையில், தாமே கூட்டமைப்பில் ஏற்கனவே இருந்தது போலவும், மற்றையவர்கள் பின்னர் அதற்குள் இணைந்தது போலவும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பாக படம் காட்டுவதாக உள்ளது.

இப்போது இவர் சொல்லுவது போன்று அந்தக் கூட்டமைப்புக்குள் இருந்தவர்கள் திருடர்கள், கொலையாளிகள் என்று தெரிந்திருந்தால், அவர்களுடன் இணைந்து அரசியல் செய்ய எவ்வாறு இவர் இணங்கினார் என்ற கேள்விக்கு என்ன பதில்?

கூட்டமைப்பு என்பதன் பொதுவான அர்த்தம், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அல்லது அமைப்புகள் ஒன்றிணைநது இயங்குவது என்பது. சுமந்திரனின் தமிழரசுக் கட்சி பல துண்டுகளாக பிளவுபட்டு இன்று தனித்து தொங்குகிறது. இவ்வாறான தமிழரசுக் கட்சியை கூட்டமைப்பு என்று எவ்வாறு சொல்ல முடியும்?

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது தேர்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒன்றல்ல. இதனை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு அதன் பங்காளிகள் பல தடவை கேட்டபோது அதனை அடியோடு மறுத்து வந்தவர்கள் சம்பந்தனும் சுமந்திரனுமே. தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் அதன் மற்றைய பங்காளிகள் அதனைத் தமக்காகப் பயன்படுத்துவதை எவரும் தவறெனக் கூற முடியாது. இருப்பினும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய மற்றைய மூன்றும் தங்களை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு அல்லது கூட்டணி என்று அழைப்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

தனித்து விடப்பட்டுள்ள உடைந்த ஒரு குழுவான தமிழரசுக் கட்சிக்கு கூட்டமைப்பு உரித்தானது என்று கூறுவதானது முந்தி வந்த காதை பிந்தி வந்த கொம்பு மறைக்க முயல்வது போலானது. சுமந்திரனின் அடுத்த விடயம் சங்கு சின்னத்துக்காக குரல் கொடுப்பது.

கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை பகிரங்கமாக ஆதரித்து தமிழ் மக்களிடம் வாக்கு கேட்ட சுமந்திரன், சங்கு சின்னத்தில் போட்டியிட்ட பொதுவேட்பாளர் அரியநேத்திரனை மிக மோசமாக எதிர்த்து பரப்புரை செய்தவர். சங்குச் சின்னத்தையும் இவர் விட்டு வைக்கவில்லை. அரியநேத்திரனை தோற்கடிப்பேனென சூளுரைத்து வீரவசனம் பேசியதோடு சங்குச் சின்னத்தை தூக்கி எறியுமாறு கோரி நின்றவர்.

எக்க ராஜ்ய கொள்கையுடன் வடக்கில் ஆயிரம் விகாரைகளைக் கட்டுவேன் என்று அறிவித்த சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக களமாடிய சுமந்திரனின் முகத்தில் கரி பூசி, இரண்டேகால் லட்சம் தமிழ் தேசிய வாக்குகளை அரியநேத்திரனுக்கு பெற்றுக் கொடுத்தது சங்கு சின்னமே. இதனை பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய அணியொன்று தனக்காகப் பெற்றுக்கொண்டதை பொறுக்க முடியாத சுமந்திரன் சங்கு சின்னத்துக்காக இன்று அழுது புரள்கிறார். சங்கை களவாடி விட்டதாக இவர் போடும் கூக்குரலுக்கு என்ன பெறுமதி? (14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷேக் ஹசீனாவை நாடுகடத்துமாறு பங்களாதேஷ் கோரிக்கை விடுத்தால் இந்தியா அதை எவ்வாறு கையாளும்?

பதவி கவிழ்க்கப்பட்ட பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனாவை இந்தியாவில் இருந்து நாடுகடத்துமாறு கோருவதற்கான திட்டங்கள் குறித்து பங்களாதேஷின் சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றத்தின் (Internatiinal Crimes Tribunal) பிரதம வழக்குத்தொடுநர் அறிவித்திருக்கிறார். "பிரதான குற்றவாளி நாட்டைவிட்டு தப்பிச் சென்றதால் அவரை நாட்டுக்கு திருப்பிக் கொண்டுவருவதற்கான சட்ட நடைமுறைகளை நாம் தொடங்குவோம்" என்று முஹமட் தாஜுல் இஸ்லாம் செப்டெம்பர் 8 ஆம் திகதி கூறினார்.



தன்னை பதவியில் இருந்து இறங்க நிர்ப்பந்தித்த மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு ஆகஸ்டில் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார். அவர் நாட்டில் இருந்து வெளியேறிய பிறகு அவருக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எதிராக பெருவாரியான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. கொலை, சித்திரவதை, சட்டவிரோத ஆட்கடத்தல், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கின்றன. மேலும், ஹசீனா வழக்கு விசாரணைகளுக்கு முகங்கொடுப்பதற்காக அவரை நாட்டுக்கு திருப்பியனுப்புவதை அனுமதிக்கக்கூடிய இருதரப்பு நாடுகடத்தல் உடன்படிக்கை ஒன்று இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் இருக்கிறது.

**உடன்படிக்கை என்ன கூறுகிறது?**

பாகிஸ்தானிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காக நடத்தப்பட்ட 1971 போரின்போது இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றத்தை ஹசீனா 2010 ஆம் ஆண்டில் அமைத்தார். 1973 ஆம் ஆண்டின் சர்வதேச குற்றங்கள் (விசாரணை மன்றங்கள்) சட்டத்தின் கீழ் ஹசீனா இல்லாமலேயே பங்களாதேஷ் நீதிமன்றங்கள் குற்றவியல் விசாரணைகளைத் தொடரமுடியும். ஆனால், விசாரணைகளின் நேர்மை குறித்தும் உகந்த செயன்முறைகள் கடைப்பிடிக்கப்பட்டனவா என்பது குறித்தும் அக்கறைகள் கிளம்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற அதேவேளை நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதிலும் சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் முன்னாள் பிரதமரை நாடுகடத்த வேண்டியது முக்கியமாகிறது.

கிளர்ச்சியையும் இரு எல்லையோர பயங்கரவாதத்தையும் கையாளுவதற்கான ஒரு தந்திரோபாய நடவடிக்கையாக இந்தியாவும் பங்களாதேஷும் 2013 ஆம் ஆண்டில் நாடுகடத்தல் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டன. இரு நாடுகளினாலும் தேடப்படும் தலைமறைவுப் பேர்வழிகளை பரிமாறிக் கொள்ளும் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் அந்த உடன்படிக்கையில் திருத்தம் செய்யப்பட்டது.

முக்கியமான பல அரசியல் கைதிகளைப் பரிமாறிக்கொள்வதற்கு உடன்படிக்கை வசதியாக அமைந்தது. உதாரணமாக, ஹசீனாவின் தந்தையார் ஷேய்க் முஜிபுர் ரஹ்மான் 1975 ஆம் ஆண்டில் இராணுவச்சதிப் புரட்சியின்போது கொல்லப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இரு குற்றவாளிகள் தூக்கிலிடப்படுவதற்காக பங்களாதேஷுக்கு 2020 ஆம் ஆண்டில் நாடு கடத்தப்பட்டனர்.

அதே போன்று டாக்காவில் 18 வருடங்களாக சிறையில் இருந்த தடை செய்யப்பட்ட அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளரான அனூப் சேத்தியா இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். குறைந்தபட்சம் ஒரு வருடச் சிறைத் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டவர்களை நாடுகடத்துவதற்கான கட்டாய ஏற்பாட்டை உடன்படிக்கை கொண்டுள்ளது.

ஒருவரை நாடுகடத்த வேண்டுமானால் "இரட்டைக் குற்றக் கோட்பாடு" ( Principle of dual criminality) பிரயோகிக்கப்பட வேண்டியது முக்கியமான ஒரு நிபந்தனையாகும். அதாவது இரு நாடுகளிலும் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்தவராக அவர் இருக்க வேண்டும்.

ஹசீனாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இந்தியாவில் வழக்குத் தொடுக்கப்படக் கூடியவையாக இருப்பதாலும் அவர் செய்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்கான தண்டனைகளும் கணிசமானவையாக இருப்பதாலும் இந்த அடிப்படைகளில் அவர் நாடுகடத்தப்படக் கூடியவராக இருக்கிறார். மேலும், குற்றங்களைச் செய்வதற்கு முயற்சித்தல், உதவிசெய்து ஒத்தாசையாக இருத்தல், தூண்டிவிடுதல் அல்லது அத்தகைய குற்றச்செயல்களுக்கு உடந்தையாக இருத்தல் ஆகியவற்றையும் நாடுகடத்தலுக்கான செயல்களாக இந்த நாடுகடத்தல் சட்டம் அதன் வீச்செல்லைக்குள் அடக்கியிருக்கிறது.

குறிப்பாக, நாடுகடத்தல் உடன்படிக்கையில் 2016 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தம் குற்றத்தைச் செய்தவருக்கு எதிராக தெளிவான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவையை அகற்றியதன் மூலம் நாடுகடத்தலுக்கான நிபந்தனையின் படிநிலையை கணிசமானளவுக்கு தாழ்த்தியிருக்கிறது. நாடுகடத்தல் கோரிக்கையை விடுக்கும் நாட்டின் தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் பிறப்பிக்கப்படும் பிடியாணை ஒன்று மாத்திரமே நாடுகடத்தல் செயன்முறையை தொடங்குவதற்கு போதுமானதாகும் என்று உடன்படிக்கையின் 10 வது சரத்து கூறுகிறது.

**நாடுகடத்தலை நிராகரிக்க முடியுமா?**

குற்றச்செயல் "அரசியல் தன்மை" ஒன்றைக் கொண்டிருக்குமானால் நாடுகடத்தல் கோரிக்கை நிராகரிக்கப்படலாம் என்று உடன்படிக்கையின் 6ஆவது சரத்து கூறுகிறது. ஆனால், இந்த குறிப்பிட்ட விதிவிலக்கு மீது கடுமையான மட்டுப்பாடுகள் இருக்கின்றன. கொலை, பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றங்கள் மற்றும் ஆட்களைக் கடத்திச் செல்லுதல் போன்ற பெருமளவு குற்றங்கள் அரசியல் தன்மையானவை என்று வகைப்படுத்தப்படும் குற்றங்களில் இருந்து பிரத்தியேகமாக புறந்தள்ளப்படுகின்றன.

ஹசீனாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் பல (கொலை மற்றும் ஆட்களை வலிந்துகாணாமல் போகச்செய்தல் போன்றவை) இந்த விதிவிலக்கு எல்லைக்கு வெளியிலேயே இருக்கின்றன. அதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அவற்றை அரசியல் ரீதியான அத்துமீறல்கள் என்று நியாயம் கூறி நாடுகடத்தலை இந்தியாவினால் நிராகரிக்க முடியாமற்போகும்.

நாடுகடத்தல் கோரிக்கையை நிராகரிப்பதற்கான இன்னொரு அடிப்படை உடன்படிக்கையின் 8 வது சரத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. நீதியின் நலன்களுக்காக நேர்மையான காரணங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படாவிட்டால் அல்லது பொதுவான குற்றவியல் சட்டத்தின் கீழான ஒரு குற்றச்சாட்டாக கருதப்படாத இராணுவக் குற்றங்கள் சம்பந்தப்பட்டதாக குற்றச்சாட்டு இருக்குமானால் நாடுகடத்தல் கோரிக்கையை நிராகரிப்பதற்கு அந்த சரத்து அனுமதிக்கிறது.

ஹசீனாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நேர்மையான காணங்களுக்காக நன்னோக்குடன் சுமத்தப்படவில்லை என்ற அடிப்படையிலும் அவர் பங்களாதேஷ் திரும்பும் பட்சத்தில் அரசியல் ரீதியான கொடுமைப்படுத்தலுக்கு ஆளாகக்கூடிய சாத்தியம் இருக்கிறது அல்லது நேர்மையற்ற ஒரு விசாரணை நடத்தப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்ற அடிப்படையில் நாடுகடத்தல் கோரிக்கையை இந்தியா நிராகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

அத்தகைய அக்கறைகளை வலுப்படுத்தக்கூடிய முறையில் அண்மைய செய்திகள் அமைந்திருக்கின்றன. ஹசீனாவின் அமைச்சரவையின் அமைச்சர்கள் விளக்கமறியல் விசாரணைக்காக வாகனங்களில் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்பட்டபோது வீதியோரம் நின்றவர்களினால் அவர்கள் அடாத்தாகக் கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

**சாத்தியமான விளைவுகள்?**

இறுதித் தீர்மானம் கூடுதலான அளவுக்கு இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளிலும் அரசியல் அக்கறைகளிலும் தங்கியிருக்கும் என்பதால் ஹசீனாவின் நாடுகடத்தலை உடன்படிக்கை உத்தரவாதம் செய்யவில்லை என்று ஓ.பி. ஜின்டால் குளோபல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச உறவுகள் பேராசிரியர் சிறீராதா டத்தா "தி இந்து" வுக்கு கூறினார்.

"நாடுகடத்தல் கோரிக்கையை இந்தியா நிராகரிப்பதாக இருந்தால் கூட, அது ஒரு சிறிய அரசியல் எரிச்சலை உண்டாக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறதே தவிர இருதரப்பு உறவுகளில் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளைப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு தாக்கத்தை செலுத்துவது சாத்தியமில்லை" என்றும் அவர் கூறினார்.

தெற்காசியாவில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளி பங்களாதேஷ் விளங்குகிறது. 2022 - 2023 நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதி 15.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டது. ஹசீனா பதவியில் இருந்து வெளியேற்றப்படுவதற்கு முன்னதாக பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக விரிவான பொருளாதார கூட்டுப் பங்காண்மை உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்வது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவிருந்தன.

டாக்காவில் ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி பங்களாதேஷின் புதிய இடைக்கால அரசாங்கத்தின் பிரதம ஆலோசகர் முஹமட் யூனுஸுடன் பேசி தற்போது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆதரவு தொடரும் என்று உறுதியளித்திருக்கிறார்.

(ஆரார்த்திகா பௌமிக், தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கான வாக்கு யாருக்கானது?

## தேசப்பற்றாளருக்கா? தேசத்துரோகிகளுக்கா?



கந்தையா அருந்தவபாலன்

தேர்தலுக்கு இன்னும் பல நாட்கள் இருப்பதாலோ என்னவோ அதற்கான பரப்புரைகள் இப்போது சமூக ஊடகங்களில் குறிப்பாக முகநூல்களில்தான் களைகட்டிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் சிரிப்பூட்டும் விடயங்களும் உண்டு. சிந்திக்கவைக்கும் விடயங்களுமுண்டு. அதற்கு மேலாக எப்படியிருந்த இனம் இப்படிப் போய்விட்டதே என்று கவலைகொள்ள வைக்கும் விடயங்களும் நிறையவுண்டு. அந்தவகையில் சிந்திக்க வைத்த ஒரு விடயம் இது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களான சிறிதரன் மற்றும் சுமந்திரன் இருவரதும் படங்களைப்போட்டு வீட்டுக்கும் அவர்களுக்கும் வாக்களிக்குமாறு அதில் கேட்கப்பட்டிருந்தது. இவ்வாறு பதிவிடுவோர்தான் சிலமாதங்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவருக்கான தேர்தலின்போது இதே முகநூல் பக்கங்களில் சுமந்திரனைத் தேசத்துரோகியென்றும் சிறிதரனை தேசப்பற்றாளனென்றும் பதிவிட்டிருந்ததுடன் இருவரது அரசியல் மோசடிகளையும் மாறி மாறி வெளிப்படுத்தியிருந்தனர். இப்போது இப்படங்களைப்போட்டுவிட்டு இருவருக்கும் வாக்களிக்குமாறு கேட்கின்றனர். அவ்வாறாயின் மக்கள் யாருக்கு வாக்களிப்பது? அவர்கள் முன்பு கூறிய தேசப்பற்றாளனுக்கா? அல்லது தேசத்துரோகிக்கா? அவர்களின் தேசப்பற்றாளனுக்கு விருப்பு வாக்கு போடுவது என்றாலும் வீட்டுக்குப் புள்ளடியிட வேண்டுமே. வீட்டுக்கு இடும் புள்ளடி அவர்களின் தேசவிரோதியின் பொதுக் கணக்கிலும் சேருமே. அதனால் தேசவிரோதியும் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுமே. சிலவேளைகளில் தேசப்பற்றாளன் தெரிவு செய்யப்படாது தேசவிரோதி தெரிவுசெய்யப்படும் நிலைமை ஏற்படாதா? அப்படியாயின் மக்கள் எவ்வாறு வாக்களிப்பது?

தேசப்பற்றாளன், தமிழ்த்தேசியவாதி, தேசத்துரோகி, இனவிரோதி என்ற சொற்கள் எல்லாம் அவரவர் தமது சிந்தனைத் தளத்திலிருந்தும், தமது தேவைகளுக்காகவும் உருவாக்கும் சொற்களேயன்றி அவற்றுக்கு தெளிவான வரையறைகள் எதுவுமில்லை. இவை எவ்வித பௌதிக வடிவுகளுமற்ற வெறும் எண்ணக்கருக்கள் மட்டுமே. எவ்வாறு பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் கூறமுடியாதோ அதுபோலத்தான் இவைகளும். எவ்வாறு பயங்கரவாதிக்கு இருபொருள் உண்டோ அதுபோலத்தான் இதுவும். சிங்கள அரசுக்குப் பயங்கரவாதிகளாகத் தெரியும் தமிழர்கள் தமிழினத்தின் விடுதலை வீரர்கள். தமிழர்களுக்கு ஆக்கிரமிப்புப் படைகளாகத் தெரிவோர் சிங்கள மக்களின் தேசிய வீரர்கள். இதுபோலத்தான் நல்லது: கெட்டது, உண்மை: பொய் என்பதெல்லாம். கடவுள் என்பது உண்மையா? பொய்யா? அது ஆத்திகருக்கு உண்மை நாத்திகருக்குப் பொய். அது மட்டுமல்ல. ஒரு காலத்தில் தேசத்துரோகியாகத் தூற்றப்பட்டவர்கள் இன்னொரு காலத்தில் தேசப்பற்றாளராகப் போற்றப்படலாம். இது மாறியும் நடக்கலாம். ஒருகாலத்தில் தேசத்துரோகிகளாகச் சுட்டிக்காட்டப்பட்ட குமார் பொன்னம்பலமும் ரவிராஜூம் இன்னொருகாலத்தில் மாமனிதர்களாகப் போற்றப்பட்டனர். ஒருகாலத்தில் தமிழின விடுதலை வீரர்களாகக் கருதப்பட்ட கருணா, பிள்ளையான் ஏன் டக்ளஸ் கூட இன்று தேசத்துரோகிகள். ஆனால் சிங்கள ஆட்சியாளர்க்கு இவர்கள்தான் தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள். ஒருகாலத்தில் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்ட ஜே.வி.பியினர் இன்று இலங்கையின் கௌரவத்துக்குரிய ஆட்சியாளர்கள்.

இவ்வாறுதான் தமிழ்த் தேசியம் என்பதுவும். ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கேற்ப இலங்கையில் தமிழர் தேசம் என்ற ஒன்றை வரையறுக்க முடியும். ஆனால் தமிழ்த் தேசியம் என்றால் என்ன? அதுவும் வடிவமற்ற ஒரு எண்ணக்கருதான். தேசத்தின் நலன்சார்ந்த பண்புக்கூறுகளை முதன்மைப்படுத்தும் ஒரு சிந்தனை வடிவம். ஆனால் அத்தேசத்தின் நலன்களை அடைவதற்கும் பாதுகாப்பதற்குமான வழிமுறைகளும் உத்திகளும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பதில்லை. அது அரசியல்,பொருளாதார, சமூகச் சூழ்நிலைக்கேற்பவும் தலைவர்களின் சிந்தனைக்கேற்பவும் வேறுபடலாம். ஈழத்தமிழர் வரலாற்றில் தமிழ்த் தேசியம் சார்ந்த சிந்தனையும் அதற்கான வழிமுறைகளும் வேறுபட்டமுறைகளில் அணுகப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. தொடக்கத்தில் அருணாசலம், இராமநாதன் போன்றோர் மட்டுமல்ல ஜி.ஜி. பொன்னம்பலமும் கூட ஒரே இலங்கைக் கட்டமைப்பினுள் அரசுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அவர்கள் கருதிய தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கலாம் எனச்செயற்பட்டனர். ஆனால் பின்னர் செல்வநாயகமும் அவருடன் இணைந்த தலைவர்களும் ஜனநாயக வழியிலான போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள், அதன்வழி அரசுக்கு ஆதரவளித்தல் போன்ற வழிகளில் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க முயன்றனர். அதன்பின்னர் ஆயுதப் போராட்டமே தமிழ் தேசியத்தைப் பாதுகாப்பதற்கான ஒரேவழி என்ற நிலைமை உருவாக்கப்பட்டது. வழிமுறைகள் எதுவாகினும் அந்தந்தக் காலத்தில் அந்தந்த வழிமுறைகளைப் பெரும்பாலான மக்கள் ஏற்றுநின்றனர் என்பது உண்மை. அதனால் அவ்வழிமுறைகள் பலம்பெற்றவையாகக் காணப்பட்டன. ஆனால் இன்று இவற்றுள் எந்த வழிமுறைகளுமில்லாது அல்லது ஒவ்வொரு வழிமுறையை ஒவ்வொரு குழுக்களும் தலைவர்களும் முதன்மைப்படுத்தி, அதன்வழி மக்களைக் கூறுபோட்டு பலவீனமாக்கிச் செல்கின்ற நிலையே காணப்படுகிறது. இதற்குக் கடந்த ஜனாதிபதித் தேர்தலே சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதற்குச் சிறந்த அணுகுமுறை பொதுவேட்பாளரே என்று ஒரு தரப்பு. அந்தத் தரப்புகளுக்குள்ளும் நேர்மை இருக்கவில்லை. இல்லை அதைப்புறக்கணிப்பதே சிறந்த வழி என்று இன்னொரு தரப்பு. அவையொன்றுமில்லை சிங்கள வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதே மிகச்சிறந்த வழி என இன்னொரு தரப்பு. சிங்கள வேட்பாளர் என்றால் யாருக்கு என்பதில் அந்த வழிமுறையிலேயே பல வேறுபாடுகள். ஒரு கட்சிக்குள்ளேயே இருவேறு நிலைப்பாடுகள். இவற்றின் மூலம் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்களோ தெரியவில்லை. ஆனால் இவ்வாறு பிளவுபட்டு நிற்பதனால் அவர்கள் தங்களையறியாமலேயே தமிழ்த் தேசத்தையும் தேசியத்தையும் நாளுக்கு நாள் பலவீனமாக்கிக் கொண்டு செல்கிறார்கள் என்பதுவே உண்மைநிலை.

இவை போலத்தான் இன்று கையாளப்பட்டுவருகின்ற 'தமிழ்த் தேசியக்

> **பழகிப்போன கையும் பார்த்துப் பேசிய வாயும் சும்மா இருக்காது என்று கூறுபவர்கள் தயவு செய்து அரசியலில் இருந்து விலகி நேர்மையான புதியவர்களுக்கு வழி விடவேண்டும். இலட்சியத்தைக் கைவிடாது போராட்ட வடிவங்களை மாற்றமுடியும்.**

கட்சிகள்' என்ற வகைப்பாடும். தமிழ்த் தேசியம் என்ற வரையறையே எவ்வளவு தூரம் சரியானது என்ற விவாதம் ஒரு புறத்தில் நடந்துகொண்டிருக்கும்போது தமிழ்த்தேசியக் கட்சிகள் என்று வரையறுப்பது இன்னும் கேள்விக்குரியது. தமிழ்த் தேசியம் என்று உச்சரிப்போர்தான் தமிழ்த் தேசியவாதிகளா? அவ்வாறு அடிக்கடி உச்சரிக்கும் தலைவர்கள்தான் தமிழ்த் தேசியவாதிகளா? அவர்களின் கட்சிகள்தான் தமிழ்த்தேசியக் கட்சிகளா? அல்லது தமிழ்த் தேசியம் என்பது தனியே அரசியல் உரிமைகளை மையப்படுத்தப்பட்ட ஒன்றா? அதனுள் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார உரிமைகள் அடக்கப்படாதா? எந்த உருப்படியான அணுகுமுறைகளுமின்றி தமிழ்த் தேசியம் என்று உரக்கக் கூறிக்கொண்டு காலத்தை கடத்துவோர் மட்டும்தான் தமிழ்த் தேசியவாதிகளா? உரிமைகளைவிட மக்களின் பொருளாதார நலனுக்கு முக்கியமளித்து அரசுடன் இணைந்து செல்வோர் தமிழ்த் துரோகிகள் என முற்றாகப் புறந்தள்ளிவிட முடியுமா? யுத்தத்தை நிறுத்த வேண்டாமெனக் கேட்டு அரசுடன் ஒட்டிக்கிடந்தபோது தமிழினத் துரோகியாகக் கருதப்பட்ட புளொட்டும் அதன் தலைவர் சித்தார்த்தனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்தவுடன் தமிழ்த் தேசியவாதிகளாகிவிட முடியுமா? நாளைக்கு டக்ளஸ் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுள் உள்வாங்கப்பட்டால் அவரும் தமிழத் தேசியவாதிதானே. தமிழ்த் தேசியத்தை உச்சரித்துக் கொண்டு இரகசியமாக அரசுடன் 'டீல்' பேசுபவர்கள் தமிழ்த்தேசியவாதிகள். அரசுடன் மட்டுமல்ல சிலர் அண்டைநாட்டுடனும் 'டீல்'பேசுபவர்கள். அவர்களின் கட்சி தமிழ்த் தேசியக் கட்சி. வெளிப்படையாக அரசுடன் 'டீல்' பேசுபவர்கள் தமிழ்த்துரோகிகள். அவர்களது கட்சி எட்டப்பன் கட்சி. உண்மையில் டக்ளஸூக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் என்று சொல்லப்படுகின்ற பல தலைவர்களுக்குமிடையில் மேற்கூறியவாறான ஒரேயொரு வேறுபாடு மட்டுமே உள்ளது. இவ்வாறு தேசியவாதிகள் துரோகிகள் என வரையறை செய்வதற்கான தகுதிவிதிகளை யாரும் வகுக்கவில்லை. தமக்கேற்ற வகையில் தமது வாக்குகளைத் தக்க வைப்பதற்காக ஒவ்வொருவரும் வகுத்துக் கொள்கி றார்கள் அவ்வளவே. உண்மையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் அனைத்தும் தமிழ்க்கட்சிகள் மட்டுமே.

தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசியவாதிகள், தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு தங்கள் தங்கள் பதவிகளை மட்டும் பாதுகாக்கும் செயற்பாடுகளிலிருந்து தலைவர்கள் வெளியே வரவேண்டும். இந்தச் சொற்களுக்கான உண்மையான அர்த்தம் உங்கள் நேர்மையான செயற்பாடுகளின் மூலம் வெளிப்பட வேண்டும். முதலில் கட்சிகள் கடந்து அனைவரும் ஒன்று பட்டு தமிழ்த் தேசத்தையும் தேசியத்தையும் பாதுகாப்பதற்கு இப்போதுள்ள தேசிய, சர்வதேச களநிலைமைகளில் பொருத்தமான அணுகுமுறை என்ன என்பதை புத்திசாதுரியமாக வரையறை செய்யவேண்டும். அதனை அடைவதற்கான பயனுறுதி வாய்ந்த அணுகுமுறைகளும் உபாயங்களும் எவையென வரையறை செய்ய வேண்டும். அதற்காக நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் உழைக்கவேண்டும். விகாரைகளுக்குமுன் ஒருசிலர் ஆர்ப்பாட்டம் செய்வதன்மூலமோ, திலீபனின் ஊர்தியை வலம்வரச் செய்வதன் மூலமோ, நாடாளுமன்றில் உரையாற்றுவதன் மூலமோ, சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுக்களின் பக்க அறைக்குள் பலகதைகள் பேசுவதன் மூலமோ, அவ்வப்போது காணமலாக்கப்பட்டவர் போராட்டத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலமோ மட்டும் அவற்றை அடைந்துவிட முடியாது என்பதை அனைவரும் உணரவேண்டும். பழகிப்போன கையும் பார்த்துப் பேசிய வாயும் சும்மா இருக்காது என்று கூறுப வர்கள் தயவு செய்து அரசியலில் இருந்து விலகி நேர்மையான புதியவர்களுக்கு வழி விடவேண்டும். இலட்சியத்தைக் கைவிடாது போராட்ட வடிவங்களை மாற்றமுடியும். இதற்குச் சிறந்த உதார ணம் நெல்சன் மண்டேலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியத்தில் வர்ணம்!

மாலி

இசைக் கச்சேரியில் ராகம் - தானம் - பல்லவி. அதுபோல, நாட்டிய நிகழ்ச்சியில் வர்ணம். இவை, குறித்த நிகழ்வை மதிப்பிட வைக்கின்றன. இப்போது நடக்கும் இசை, நடன அரங்கேற்றங்களும் இவ்வாறே அமைகின்றன. இசை அரங்கேற்றம் ஒன்றில் ராகம் - தானம் - பல்லவி எத்துணை அர்த்தமுடையது என்பது எப்படியிருப்பினும், ராகம் - தானம் - பல்லவியுடனும் தான் இசை அரங்கேற்றங்கள் பெரும்பாலும் நிகழ்கின்றன.

ஒருமுறை வழுவூர் ராமையாபிள்ளை 'கலைமகள்' சஞ்சிகையில் தெரிவித்திருந்த சம்பவம் ஒன்று மனதில் பதிந்திருக்கிறது. அந்த, 'கலைமகள்' பிரதியும் கையில் இருக்கிறது.

"சங்கீத வித்வத் சபை (மியூசிக் அக்கடமி) நிகழ்ச்சிகளில் பங்குபெற நாகஸ்வர வித்வான் குழிக்கரை பிச்சையப்பா பிள்ளை வந்திருந்தார். அவருக்கு தவில் வாசிக்க நாச்சியார் கோயில் ராகவ பிள்ளை வந்திருந்தார். இவர்கள் என் விருந்தினர்களாக என் இல்லத்தில் தங்கியிருந்தார்கள்.

'புதிதாக பல்லவி ஏதாவது சொல்லுங்களேன், இரவு நிகழ்ச்சியில் வாசிக்கிறேன்' என்று கேட்டார் பிச்சையப்பா பிள்ளை.

'பழசுதான் தெரியும், மாம்பழ பல்லவி என்று அதற்குப் பெயர். "சோலையிலே கட்டி மாம்பழம் பழுத்திருக்குது பன்னிருகை வேலவனே" - இந்தப் பல்லவியைச் சொல்லி, இது திஸ்ரமும் சதுஸ்ரமும் கலந்தது. சதுஸ்ரஜாதி திரிபுடையில் ஒரே ஆவர்த்தத்தில் முன்பகுதி திஸ்ர நடையும் பின்பகுதி சதுஸ்ர நடையும் என்று தாளத்தைப் போட்டுப் பாடிக் காட்டினேன்.

இருவரும் சிறந்த மேதைகளானதால் அநாயாசமாக இதை மனதில் வாங்கிக்கொண்டார்கள். மேலெழுந்த



வாரியாக நோக்குமிடத்து மிகவும் எளிதாக தோற்றும். இது, காலப் பிரமாணத்தைத் தள்ளத் தள்ள இடைஞ்சல் தருவதாக அமையும்.

நிகழ்ச்சியில் பைரவியை அற்புதமாக ஆலாபனை செய்துவிட்டு, பல்லவியை எடுத்தார் பிச்சையப்பா பிள்ளை. ராகவப்பிள்ளை உற்சாகமாக வாசிக்கலானார். ஆனால், கணக்குவழக்கு சரிவரவில்லை. முன்னணியில் அமர்ந்திருந்த பெரியபெரிய இசை மேதைகள் நிமிர்ந்து உட்கார்ந்து தாளமிட ஆரம்பித்தார்கள். அப்பொழுதும் சரிவரவில்லை.

பல்லவிக்கு அடிப்படை தாளம். 'இன்ன முறை' என்பதைப் புரிந்துகொண்டுவிட்டால் எளிதாக தாளமிடலாம். தாளக் காரரிடம் முன்கூட்டி விவரம் அறிவிக்காததுதான் இந்த நிலைக்குக் காரணம். கலையின் பலதுறை அறிஞரும் லய மேதையுமாகிய அம்மாசத்திரம் கண்ணுச்சாமி பிள்ளையின் புதல்வர் திருவழுந்தூர் கணேசபிள்ளை அருகிருந்தார். அவரிடம் விவரம் உரைத்ததும் அவர், முன்னே சென்று தாளமிட்டார். தாளக்காரர் புரிந்துகொண்டார். அதன் பின்னர் அந்தப் பல்லவி பிரமாதமாக அமைந்தது."

ஆக, பல்லவி இப்படியானது. அரங்கேற்றங்களில் எப்படியோ ஒப்பேற்றிவிடுகிறார்கள் அல்லது 'ஜமாய்த்துவிடுகிறார்கள்'.

பரதநாட்டியத்தில் வர்ணமும் இப்படி கனதியான - சவாலான உருப்படி. பூர்வாங்கம், உத்தராங்கம் என்று இரு பகுதிகளைக்கொண்டது. பல்லவி, அநுபல்லவி, முக்தாயிஸ்வரம், மீண்டும் பல்லவி என்ற கிரமத்தைக் கொண்டது பூர்வாங்கம். உத்தராங்கம் எத்துக்கடைப் பல்லவியையும் சரணங்களையும் கொண்டிருக்கும். சரணங்களில் ஸ்வர கோர்வைகளின் இறுதியில் எத்துக்டைப் பல்லவி. வெவ்வேறு ஆவர்த்தனங்களில் ஸ்வர கோர்வைகள்.



நிருத்தம், அபிநயம், பாவம் அனைத்துக்குமான உருப்படி. ஆடுபவரின் ஈடுபாட்டுடனான பயிற்சி, ஆற்றல், ஆளுமை அனைத்தையும் வெளிப்படுத்தும்.

சம்பிரதாயமாக அமைகின்ற பிரபலமான பல வர்ணங்கள் பலராலும் எப்போதும் ஆடப்படுகின்றன. புதிதாக சிலர் அமைத்த வர்ணங்களும் உண்டு. பொதுவாக நாயக, நாயிகா பாவத்துடன் வர்ணங்கள் அமைகின்றபோது, சங்க இலக்கிய காட்சிகளிலும், இன்னும் வேறு கருப்பொருளிலும், சில தேர்ந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
vi[illegible]kthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** வடக்கு - கிழக்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி குறைந்தது 10 ஆசனங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே தமது இலக்கு என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே. இது சாத்தியமானது என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலிலும், பதினைந்தாம் ஆண்டு தேர்தலிலும் பதினையாயிரம் வாக்குகளுடன் இருந்த அவர்களின் கட்சியை இருபது தேர்தலில் இரண்டு எம்.பி.க்கள் பெறும் அளவிற்கு உயர்த்தியவர்கள் தமிழ் அரசு கட்சி என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்தானே. அவர்கள் தமது தவறுகளை திருத்திக்கொண்டு செயற்பட்டிருந்தால், மீண்டும் அவர்கள் பதினையாயிரம் வாக்குகள் என்ற நிலைக்கு போயிருப்பார்கள். ஆனால் இப்போதும் தமிழ் அரசும் மற்றயவர்களும் திருந்திய மாதிரி தெரியவில்லையே. அவர்களின் 'சதிராட்டத்தால்' பத்தென்ன அதைவிட அதிகமாக பெற்றலும் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லையே. அவர்களாவது தமிழ் தேசியத்தை தாங்கிப்பிடிக்கத்தானே வேண்டும்.?

---

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** தமிழ் மக்கள், தமிழ்த் தேசியம் சார்ந்த நபர்களை மட்டும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டும் என்று முன்னாள் எம்.பி.க்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனரே.

**வியுக்தியார்:** எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழ் ஈழக்கனவுகளோடு இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது, ஒரு கட்டத்தில் முப்பத்தி ஐந்துக்கும் அதிகமான இயக்கங்கள் இருந்தன. அவை எல்லாவற்றினதும் குறிக்கோள் தமிழ் ஈழம்தான். அது போல இன்று தேர்தலில் போட்டியிடுகின்ற எல்லோருமே தமிழ் தேசியவாதிகள் என்றுதானே கூறிக்கொள்கிறார்கள். தேசியம் சார்ந்த நபர்கள் என்றால், எப்படிக் கண்டுபிடிப்பது? ஏதேனும் கருவி இருக்கின்றதா என்றும் கேட்டுச் சொல்கின்றேன்.

---

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளை தமிழ் தரப்புகளுக்கு அளிக்க வேண்டுமே தவிர, மாறாக தென்னிலங்கை தரப்புக்கு அளிக்கக் கூடாது - என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளதே. தமிழர் தரப்பு என்றால், அங்கஜன் ராமநாதனும் இப்போது ஜனநாயக தேசிய முன்னனணி என்ற பிரபா கணேசனின் கட்சியில் தான் போட்டியிடுகிறார். அவரையும் சேர்த்துத்தானே தமிழர் தரப்பு என்கின்றனர்.?

**வியுக்தியார்:** உண்மைதான். அங்கஜன் மட்டுமல்ல, டக்ளஸ் தேவானந்தாவும் தமிழர் தரப்புத்தான். அவரும் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையைக் கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற கட்சியில் தான் போட்டியிடுகின்றார். தெற்கில் ஏற்பட்ட மாற்றம் வடக்கிலும் ஏற்படவேண்டும் என்றும் சொன்னவர்கள், எங்களுடைய வடக்கு - கிழக்கு தமிழர்கள், தமிழ்த் தேசியம் என்ற ரீதியிலேயே நின்று - தமிழர்களின் உரிமைககாக குரல் கொடுக்கக்கூடியவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதையே கேட்டுக்கொள்கின்றோம் என்றும் சொல்லியிருக்கிறார்களே. தேசியமும் பாதுகாக்கப்படவேண்டும், மாற்றமும் வரவேண்டும் என்கிறார்கள். அதன் அர்த்தம் இதுவரை தேசியம் பேசுகின்றவர்கள் வேண்டாம் என்பது போலவும் அல்லவா இருக்கின்றது?.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** உதய கம்மன்பில உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பேரழிவுடன் அரசியல் செய்யக்கூடாது என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி கூறியிருப்பதை கவனித்தீர்களா?. கம்மன்பில இனியாவது திருந்துவார் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாத மிக கொடுமையான நிகழ்வுதான். அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. ஆனால், அந்த தாக்குதலை வைத்து கம்மன்பில மாத்திரம் அரசியல் செய்தால் அது பிழையானதுதான். கத்தோலிக்க திருச்சபையும் தேர்தல் காலங்களில் அதுகுறித்து பேசுவது [illegible] வதும் கூட அரசியல்தானே. ஒரு தேர்தல் நடக்கின்றபோது, யார் நீதியான விசாரணையை நடாத்துவார்கள் என்று பார்த்து அவர்களுக்கு ஆதரவாக கருத்துச் செல்வதும் அரசியல்தான். வெற்றிபெறுகின்ற ஒருவரை நீதியான விசாரணை நடாத்துமாறு நிர்ப்பந்திக்கவேண்டுமே தவிர, போட்டியிடுகின்ற ஒருவரை ஆதரிப்பதும் அரசியல்தான்.

---

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இலங்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான 108 வாகனங்கள் தற்போது அங்கு இல்லை என இலங்கைத் தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் வெளிவந்துள்ளதாமே. ஒரு வாகனம் காணாமல்போனால் கண்டுபிடிக்கவும் முடியாதா?. வாகனங்களுக்கு எதற்காக இலக்கத்தகடுகள் பொருத்தப்படுகின்றன?. இப்படி காணாமல்போனால் கண்டுபிடிப்பதற்காகத்தானே?

**வியுக்தியார்:** உங்களுக்கு வந்திருக்கும் சந்தேகம் நியாயமானதுதான். ஆனால் காணாமல்போன வாகனங்களின் இலக்கத்தகடுகளை மாற்றி, அதே ரகத்திலான வேறு ஒரு வாகனத்தின் இலக்கத்தகடுகளை பொருத்திக்கொண்டு ஓடித்திரிந்தால், கண்டுபிடிப்பது கொஞ்சம் சிரமமானதுதான். வாகனத்தின் இஞ்சினில் இருக்கும் இலக்கத்தையும் வாகனத்தின் பத்திரங்களையும் பரிசோதித்துதான் அவற்றைக்கண்டுபிடிக்கவேண்டும். அதுவல்ல நமக்கு உறுத்துவது, தமது திணைக்களத்தின் வாகனங்களையே பாதுகாக்க முடியாதவர்கள் எப்படி சிவிலியன்களைப் பாதுகாக்கப்போகின்றார்கள் என்பதுதான்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** 'நாங்கள் புதிய ஒரு அரசியல் யாப்பை விரைவாக கொண்டு வருவோம். அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரை மாகாண சபை முறைமையை பாதுகாப்போம். அந்த தேர்தலும் நடத்தப்படும்." என்று ஜேவிபியின் தலைவர்களில் ஒருவரான பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கிறாரே. அது சாத்தியமாகுமா என்பது தெரியவில்லை. ஆனால், அப்படி நினைப்பதாவது ஆறுதலானதுதானே?

**வியுக்தியார்:** அவர் நினைப்பது ஆறுதலானதுதான். ஆனால் அவர்கள் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதெனில் முதலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும். அதற்கும் அப்பால் சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டியிருக்கும். எனவே புதிய அரசியலமைப்பு வருவதற்கு முன்னர் மாகாண சபைக்கு தேர்தல் வரும் என்பது சற்று ஆறுதலானதுதான். எனது கவலையெல்லாம், மாகாணசபைக்கு தேர்தல் வந்தாலும் இப்போது இருக்கின்ற அரசியல் வாதிகள் தானே வடக்கு மாகாண நிர்வாகத்தையும் வெற்றிகொள்வார்கள். அப்படி நடந்தால் மாகாணசபைக்கு தேர்தல் நடந்தென்ன, நடக்காமல் விட்டால் என்ன? என்பதுதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா குடியரசு நாடாக சாத்தியமா? முடியாட்சி முடிவுற வாக்கெடுப்பு நடக்குமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



அவுஸ்திரேலியா தொடர்ந்தும் பிரித்தானிய மன்னரின் முடியாட்சிக்கு கீழ் இருக்க வேண்டுமா அல்லது சுதந்திரமான குடியரசு நாடாக வேண்டுமா என்பதை அவுஸ்திரேலிய மக்கள் முடிவு செய்ய வேண்டிய காரியம் என்று மன்னர் சார்ள்ஸ் தெரிவித்திள்ளார்.

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் மற்றும் அவர் மனைவி ராணி கமீலா இருவரும் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

சிட்னி மற்றும் கான்பராவில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இருக்கும் போது அவுஸ்திரேலியாவில் மன்னரின் முடியாட்சியின் எதிர்காலம் குறித்த விவகாரங்கள் ஒரு பிரச்சனையாக ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மன்னரின் வருகைக்கு முன்னதாக மன்னரின் சார்பாக பக்கிங்ஹாம் அரண்மனையும், அவுஸ்திரேலிய குடியரசு இயக்கமும் தங்கள் கருத்துக்களை காரசாரமாக பரிமாறிக் கொண்டுள்ளனர்.

**அவுஸ்திரேலியா குடியரசு வாக்கெடுப்பு**

இந்த ஆண்டின் இறுதியில் அவுஸ்திரேலியாவின் அரச தலைவர் பதவியில் இருந்து மூன்றாம் சார்ள்ஸ் மன்னரை நீக்குவது தொடர்பான வாக்கெடுப்பை நிறுத்தி வைத்துள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்தது.

ஆயினும் குடியரசாக மாறுவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது பிரதமர் அந்தோனி அல்பனீஸின் நீண்டகால கொள்கையாகும். கடந்த ஆண்டு அரசாங்கம் பழங்குடியினர்க்கான வாக்கெடுப்பில் அரசு தோல்வியடைந்தது. பழங்குடியின மக்களுக்கு அதிக அரசியல் உரிமைகளை வழங்கும் திட் டத்தை அவுஸ்திரேலியர்கள் பெருமளவில் நிராகரித்த வாக்கெடுப்பு கடந்த வருடம் நடந்தது.

பழங்குடியின மக்களை அங்கீகரிப்பதற்காக அரசியலமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவுக்கு எதிராக ஆறு மாநிலங்களும் வாக்களித்தன. இது ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியிருக்கும் என்று ஆதரவாளர்கள் பலரும் கூறினார்கள். ஆனால் எதிர்ப்பாளர்கள் நாட்டை பிளவுபடுத்துவதாக கூறினர்.

நீண்ட காலமாக இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்து பிரிந்து செல்வது அவுஸ்திரேலியாவின் ஆளும் தொழிலாளர் கட்சியின் திட்டமாகும்.

வரலாற்று ரீதியில், 1999 இல் ஒரு வாக்கெடுப்பில் முடியாட்சியுடனான உறவுகளை துண்டிப்பதற்கு எதிராக நாடு வாக்களித்தது. அதன் பின்னர் கால் நூற்றாண்டில் மற்றொரு வாக்கெடுப்புக்கான அழைப்புகள் கோரப்பட்டன.

**நியூசிலாந்தும் முடியாட்சியை விட்டு வெளியேறும்?**

நியூசிலாந்தின் முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவருமான கிறிஸ் ஹிப்கின்ஸ், தனது நாடும் விரைவில் முடியாட்சியை விட்டு வெளியேறும் என்று கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் மன்னரை நீக்கிய கடைசி நாடாக 2021 ஆம் ஆண்டில் பார்படாஸ் உலகின் புதிய குடியரசாக மாறியது. அதன் அரச தலைவராக இருந்த எலிசபெத்தை நீக்கிய பிறகும், அந்நாடு காமன்வெல்த்தில் தொடர்ந்து இருக் கிறது.

பார்படாஸுக்கு முன்பு, 1992 இல் மொரீஷியஸ் நாடும், பிரிட்டிஷ் மன்னரை நீக்கியது. உத்தியோகபூர்வ விழாவின் போது ஒரு உரையில், அப்போதைய வேல்ஸ் இளவரசர் சார்லஸ் - பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது கரீபியன் தீவு அனுபவித்த "அடிமைத்தனத்தின் கொடூரமான கொடுமையை" வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்.

**அவுஸ்திரேலியக் கூட்டமைப்பு**


தற்போது முடியாட்சியை நிறுத்தக் கோரும் அவுஸ்திரேலியா 1901, சனவரி 1 இல், அவுஸ்திரேலியக் கூட்டமைப்பாக நிறுவப்பட்டது. அப்போது பிரித்தானிய இராச்சியத்திற்குள் அடங்கிய "பொதுநலவாய அவுஸ்திரேலியா" பிறந்தது.

> நீண்ட காலமாக இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்து பிரிந்து சென்று, குடியரசாக மாறுவதே அவுஸ்திரேலியாவின் ஆளும் தொழிலாளர் கட்சியின் திட்டமாகும். ஆயினும் அவுஸ்திரேலியா குடியரசு நாடாக சாத்தியமா என்பதும், முடியாட்சி முடிவுற வாக்கெடுப்பு எப்போது என்பதும் இன்னமும் தெரியவில்லை

1911 ஆம் ஆண்டில் நியூ சவுத் வேல்சு மாநிலத்தின் ஒரு பகுதி அவுஸ்திரேலிய தலைநகராக தனிப் பிரதேசமாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் கூட்டமைப்பின் தலைநகரம் கான்பராவில் 1927 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

அதுவரையில் மெல்பேர்ண் நகரம் கூட்டமைப்பின் தற்காலிகத் தலைநகரமாக இருந்தது. தெற்கு அவுஸ்திரேலியாவின் பகுதியாக இருந்த பிரதேசம் 1911 இல் நடுவண் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

முதலாம் உலகப் போரில் அவுஸ்திரேலிய போரில் ஈடுபட்டது. கலப்பொலி போரில் அவுஸ்திரேலிய வீரர்களின் பங்களிப்பு இந்நாட்டு இராணுவத்தினரின் முதலாவது பெரும் போர்ப் பங்கெடுப்பு ஆகும். இப்போரில் அவர்கள் தோல்வி யடைந்தாலும், இந் நடவடிக்கை நாடொன்றின் எழுச்சியாக பெரும்பாலான அவுஸ்திரேலியர்களால் கணிக்கப்படுகிறது.




**ஐரோப்பியர் வருகை**

அவுஸ்திரேலியாவில் முதல் மனிதர் குடி யேறியது 42,000 முதல் 48,000 ஆண்டுகளுக்கு முன்னர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவர்கள் தற்போது அவுஸ்திரேலியாவில் உள்ள பழங்குடிகளின் மூதாதையர் என அறியப்படுகிறது.

அவுஸ்திரேலியப் பெரும்பரப்பை முதன் முதலில் வந்தடைந்த ஐரோப்பிய டச்சு மாலுமியான வில்லெம் சான்சூன் என்பவர், கேப் யோர்க் தீபகற்பத்தின் கரையை 1606 இல் கண்டார்.

17ம் நூற்றாண்டு காலகட்டத்தில் டச்சுக் காரர் மேற்கு மற்றும் வடக்குக் கரைகளில் வந்திறங்கி அப்பகுதிக்கு புதிய ஒல்லாந்து எனப் பெயரிட்டனர். ஆனாலும் அவர்கள் அங்கு குடியேற முயலவில்லை.

**அவுஸ்திரேலிய - குடியரசு அல்லது முடியாட்சி?**

ஐக்கிய இராச் சியத்தில் 1931 ஆம் ஆண்டில் இயற்றப் பட்ட வெசிட்மின் சுடர் சட்டம் அவுஸ்திரேலியா வுக்கும், ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் இருந்த அரசியலமைப்புத் தொடர்புகளைப் பேணி வந்தாலும் 1942 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட உப சட்டம் 1931 சட் டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

1942 இல் இரண்டாம் உலகப் போரின் போது ஆசியாவில் ஐக்கிய இராச்சியத்தின் தோல்விகளும், ஜப்பானியப் பேரரசின் முற்றுகையும் அவுஸ்திரேலியாவை ஐக்கிய அமெரிக்காவுடன் அணி சேர வாய்ப் பாக இருந்தது.

1951 ஆம் ஆண்டில் இருந்து ஐக்கிய அமெரிக்காவுடன் அன்சாட் என்ற பாதுகாப்பு உடன்பாட்டை அவுஸ்திரேலியா ஏற்படுத்திக் கொண்டது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவில் இருந்து மக்கள் அவுஸ்திரேலியாவில் குடியேற வாய்ப்பளிக்கப்பட்டது.

**வெள்ளை அவுஸ்திரேலிய கொள்கை**

வெள்ளை அவுஸ்திரேலிய கொள்கை முடிவுக்கு வந்ததை அடுத்து 1970களில் இருந்து ஆசியா மற்றும் ஐரோப்பா அல்லாத மற்ற நாடுகளில் இருந்து மக்கள் இங்கு குடியேற ஊக்குவிக்கப்பட்டனர். இதனையடுத்து அவுஸ்திரேலி யாவின் மக்கள் பரம்பல், பண்பாடு, மற்றும் தன்னடையாளம் ஆகியவற்றில் பெரும் மாற்றம் ஏற்படலாயின.


அவுஸ்திரேலியவுக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் இருந்து வந்த அரசியல் சட்ட இணைப்பு 1986 நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து அவுஸ்திரேலிய மாநிலங்களில் பிரித்தானியாவின் பங்கு முடிவுக்கு வந்தது.

அவுஸ்திரேலியாவைக் குடியரசாக மாற்றுவதற்காக 1999 இல் நடத்தப்பட்ட அனைத்து மக்கள் வாக்கெடுப்பில் 54 விழுக்காட்டினர் எதிராக வாக்களித்தனர்.

அவுஸ்திரேலிய மக்களின் முடிவு தற்போது மன்னரின் வருகைக்கு முன்னதாக அவுஸ்திரேலியாவில் குடியரசுக்காக பிரச்சாரம் செய்யும் குழுவின் சந்திப்பிற்கு முன்னதாக இது இணக்கமான பரிமாற்றமாக பார்க்கப்படுகிறது.

பக்கிங்ஹாம் அரண்மனை கடிதத்தின் உள்ளடக்கங்கள் கூடுதலாக எதுவும் வழங்கப்படவில்லை. இருப்பினும், நீண்ட காலமாக நீண்ட இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்து பிரிந்து செல்வது அவுஸ்திரேலியாவின் ஆளும் தொழிலாளர் கட்சியின் திட்டமாகும். இவ்வருடம் சாத்தியம் இல்லாவிடினும் எதிர்காலத்தில் சாத்தியமா என்பது கேள்விக்குறியாகும். •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி குறித்து மாணவிகள் அச்சமடையத் தேவையில்லை

கொழும்பு, ஒக். 20

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும் நோக்கில் செலுத்தப்படும் எச்.பி.வி. தடுப்பூசி செலுத்திய பின் ஏற்படும் பக்க விளைவுகள் குறித்து பாடசாலை மாணவிகள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

களுத்துறை பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் ஐந்து மாணவிகளுக்கு எச்.பி.வி. தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் அந்த மாணவிகளுக்கு வயிற்று வலி, குமட்டல் மற்றும் தலைவலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், சுகயீனமுற்ற மாணவர்களுக்கு உரிய வைத்திய சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் குணமடைந்துள்ளனர்.

தடுப்பூசி செலுத்தப்படும்போது மாணவிகளுக்கு ஏற்படும் அச்சம் காரணமாகவே இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றன - என்றுள்ளது.

(அ)

# முட்டை பதுக்கப்பட்டமையே விலை அதிகரிப்புக்கு காரணம்

கொழும்பு, ஒக். 20

குளிர்பதன கிடங்குகளில் முட்டைகள் பாரியளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமையே முட்டை விலை உயர்வுக்கு காரணம் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் இன்று முட்டையின் விலை 40-45 ரூபாவாக அதிகரித்துள்ளது.

சூப்பர் மார்க்கெட்டுகளில் முட்டைகள் முன்பு இருந்ததை விட குறைவாக உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காரணமாக குளிர்பதன கிடங்குகளில் முட்டைகள் பாரியளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமையே இந்த விலை உயர்வுக்கு காரணம்.

இந்த முட்டைக் கிடங்குகளில் உள்ள முட்டைகளை அரசு நேரில் சென்று சோதனை செய்து உரிய தண்டனை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இதன் மூலம் மக்களுக்கு மானிய விலையில் முட்டை வழங்க வாய்ப்பு உள்ளது, நம் நாட்டில் ஏராளமான முட்டைகள் உள்ளன.

மேலும் நாட்டிலிருந்து ஒரு முட்டை கூட கொண்டு வர வேண்டிய அவசியமில்லை - என்றார்.

(அ)

# இனப்பிரச்னை தொடர்பில்...

(07ஆம் பக்கம் பார்க்க)

பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா சில தினங்களுக்கு முன்னர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறிய கருத்துக்கள் அமைந்திருந்தன.

"அரசிலமைப்புக்கான 13 வது அரசியலமைப்பு திருத்தம் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. அவர்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைக்கே தீர்வு அவசியமாகிறது. தமிழ் அரசியல்வாதிகள் மாத்திரமே தங்களது அதிகாரத்தை தக்கவைப்பதற்காக 13வது திருத்தத்தையும் அதிகாரப் பரவலாக்கத்தையும் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி திசாநாயக்கவை பதவிக்கு கொண்டுவந்ததன் மூலம் தென்னிலங்கை மக்கள் கொண்டுவந்திருப்பதாக கூறப்படும் மாற்றத்தில் தங்களது நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்கு எந்தளவுக்கு இடமளிக்கப்படும் என்பதில் தமிழ் மக்களுக்கு ஏற்கெனவே இருக்கும் சந்தேகத்தை வலுப்படுத்தும் வகையில் ஜே.வி.பி. செயலாளரின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

தமிழ் மக்கள் அல்ல தமிழ் அரசியல்வாதிகளே 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்கிறார்கள் என்று தமிழ் மக்களின் குறைந்தபட்ச அரசியல் அபிலாசைகளைக் கூட ஏற்றுக்கொள்ள மறுத்து வரும் இனவாதிகள் நீண்டகாலமாகவே கூறிவருகிறார்கள். அது ஒன்றும் ரில்வின் சில்வாவின் கண்டுபிடிப்பு அல்ல. ஜே.வி.பி. தலைவர்கள் ஒருபுறத்தில், தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு பிறகு இனவாத அரசியல் முடிவுக்கு வருவதாக கூறுகின்ற அதேவேளை, மறுபுறத்தில் இனவாதிகளின் பழையை கருத்தை தாங்களே திருப்பிக் கூறிக்கொண்டிருப்பது விசனத்துக்குரியது.

மாற்றத்தைக் கொண்டுவரப்போவதாகவும் புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப்போவதாகவும் சூளுரைத்துக் கொண்டு ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் இனவாதிகள் காலங்காலமாக மக்களை தவறாக வழிநடத்துவதற்கு கூறிவந்த கருத்துக்களிலேயே நம்பிக்கை வைப்பதாக இருந்தால் மாற்றம் என்பதில் அர்த்த மில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் தொடர்பில் ஜே.வி.பி. தலைவர்கள் இதுகாலவரையில் கடைப்பிடித்துவந்த கொள்கைகளில் மாற்றம் செய்யாதவரை அவர்கள் பெருமையுடன் பேசுகின்ற மாற்றம் முழுமையடையப் போவதில்லை. குறைந்த பட்சம் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கேனும் வசதியான சூழ்நிலை தென்னிலங்கையில் தோன்றவில்லை என்றால் ஜனாதிபதி திசாநாயக்க கூறுகின்ற புதிய கலாசாரம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எந்த பயனையும் கொண்டு வரப்போவதில்லை. மாற்றத்தின் மட்டுப்பாடுகள் மாத்திரமே அம்பலமாகும்.

இலங்கையின் இதுகாலவரையிலான இனஉறவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சகல இனத்தவர்களையும் சமத்துவமாக நடத்தி இலங்கையர்கள் என்ற அடையாளத்தை ஏற்படுத்துவது என்பது வெறுமனே ஒரு சுலோகமாகவே இருந்து வந்திருக்கிறது. சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக படுமோசமான அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்ட அரசாங்க தலைவர்களும் கூட அந்த சுலோகத்தை தாராளமாகப் பயன்படுத்தினர்.

சமூகங்களின் கலாசார தனித்துவங்களைப் பேணக்கூடியதாகவும் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற வசதி செய்யக்கூடியதாகவும் ஒரு சட்டரீதியான கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் மாத்திரமே இலங்கையர்கள் என்ற தேசிய அடையாளத்தை சகல சமூகங்களும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வழிசெய்யமுடியும். அதற்கான நேர்மறையான சமிக்ஞை தென்னிலங்கையில் இருந்து புதிய ஆட்சியாளர்களிடம் இருந்தே வரவேண்டும்.

# பொதுத்தேர்தல் தொடர்பில் 343 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஒக். 20

பொதுத்தேர்தல் தொடர்பாக இது வரை 343 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 18 ஆம் திகதியிலிருந்து நேற்று முன் தினம் வரையிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றில், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாகவே 343 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், நேற்று மாலை 4.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் மாத்திரம் 23 தேர்தல் சட்ட மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (அ)

# திடீரென வெடித்து சிதறிய கையடக்கத் தொலைபேசி!

கொழும்பு, ஒக். 20

ஹற்றன் பிரதேசத்தில் உள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் நபரொருவரின் கையில் இருந்த கையடக்கத் தொலைபேசி ஒன்று திடீரென வெடித்து சிதறியுள்ளது.

கையடக்கத் தொலைபேசியின் பற்றரியை கழற்றி சோதனை செய்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த ஆடை விற்பனை நிலையத்தில் உள்ள சி.சி.ரி.வி கமெராவில் கையடக்கத் தொலைபேசி வெடித்து சிதறிய காட்சிகள் பதிவாகியுள்ளன.

இதன்போது, அங்கிருந்த யாருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை.

கையடக்கத் தொலைபேசிகளை அதிக நேரம் சார்ஜ் செய்வதால் அதன் பற்றரி வெடிக்கும் அபாயம் உள்ளதாக கையடக்கத் தொலைபேசிகளை பழுது பார்ப்பவர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# தலைவரேயின்றி...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியத்தின் சின்னமாகத் திகழும் சங்கு தனது அணியை காணாமல் செய்துவிடுமென்ற அச்சம் இவரிடம் அதிகமாகவே காணப்படுகிறது. தேர்தல் பரப்புரை என்றால் கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் தங்கள் கொள்கைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதே வழமை. ஆனால் இன்று, கூட்டமைப்பு யாருக்குச் சொந்தம் என உரிமை கோருவதும், சங்கு சின்னத்துக்காக நீலிக்கண்ணீர் வடிப்பதுமே என்ற நிலைக்கு தமிழரசின் சுமந்திரன் அணி இறங்கியுள்ளது.

மாட்டின் வால் போன்று கீழ் நோக்கி வளர்ச்சி காணும், தலைவரென எவரும் இல்லாத தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்தை சங்கும், சைக்கிளுமே தீர்மானிக்குமென பரவலாக சொல்லப்படுவதை அறிவதற்கு இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டும். •

# பரத நாட்டியத்தில்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைஞர்கள் வர்ணங்களை அமைத்து ஆடுகின்றனர்.

பரதநாட்டிய அரங்கேற்றங்களில் குறித்த அந்த அரங்கேற்றத்துக்கென்றே அமைக்கப்பட்ட புதியதொரு வர்ணத்துக்கு ஆடுவதும் இப்போது நிகழ்கிறது. வர்ணத்தின் திட்டமான அமைப்புடன், அதன் ரசனை நம்மை ஈர்த்துவிடுகையில், அவை அமைவாகின்றன.

அண்மையில் லண்டனில் பார்த்த பரதநாட்டிய அரங்கேற்றம் ஒன்றில் வித்வான் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி அமைத்த வர்ணம் இடம்பெற்றது. அரங்கேற்ற குரு பிரசாந்தினி உதயபாபுவின் சாகித்திய வரிகளுக்கு, மோகனத்தில் இது அமைக்கப்பட்டிருந்தது.

பொதுவான வர்ணமொன்றைவிட கூடுதலான சாகித்திய வரிகளுடன், இலங்கையில் வல்லிபுர ஆழ்வார்மீதானதாக அமைந்திருந்தது. இத்துணை அதிக சொற்களைக் கொண்டிருந்தபோதும் ஐந்தே சுரங்களைக்கொண்ட மோகனத்தில், முழுமையான கம்பீரத்துடன் அது அமைந்திருந்தது. காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியே அரங்கேற்றத்தில் மிருதங்கம் வாசித்தார். சபிதா, சஜீதா சசிகரன் என்ற சகோதரிகள் இருவரின் அரங்கேற்றம். கொடுத்துவைத்தவர்கள் என்றே சொல்லவேண்டும்.

ருக்மிணி அருண்டேல் காலத்தில், கலாஷேத்திராவில் நடனத்துக்கான மிருதங்க வாசிப்பு முறையை தோற்றுவித்தவர் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி. இப்போது 86 வயது. தங்களுக்கு இவர் வாசிக்கவேண்டும் என்று அத்தனை பிரபல நடன கலைஞர்களுமே விரும்பினார்கள். 'எழுந்து ஆடவேண்டும்போல் இருந்தது' என்று, சற்று வயதாகிவிட்ட காலத்து ருக்மிணி அருண்டேல் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தபோது விதந்தார்.

பிரசாந்தினி உதயபாபு கலாஷேத்திரா பட்டதாரி. நம்முயை யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயரின் பேர்த்தியான அரவணைப்போ, அழகான சாகித்திய அமைப்பு. அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டவர் (நடிகை) சுகன்யா. நல்ல ஒரு நடன கலைஞர். அவரும் கலாஷேத்திரா காரர். அவருக்கும் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி பல தடவைகள் வாசித்திருக்கிறார்.

ஆக, இத்துணை அநுபவமும் மேன்மையுமான காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி அமைத்த வர்ணம் அது. யாதவனின் அந்த பாட்டும், ஜலதரன், ஞானவரதன் ஆகியோரின் வயலின், புல்லாங்குழலும் பிரசாந்தினியின் நட்டுவாங்கமும் அதன் சோபையை உன்னதமாக்கின. சகோதரிகளும் நிருத்த, அபிநய, பாவங்களில் தம்மை அழகுற வெளிப்படுத்தினார்கள். மனம் ஒன்றிப்போயிருந்தது.

ஆனால், பின்னர் சில ஆதங்கங்கள்...

இந்த சகோதரிகள் இந்த வர்ணத்தை மென்மேலும் ஆடுவார்களா? பிரசாந்தினி இதனை இன்னமும் பல மாணவிகளுக்கு பயிற்றுவிப்பாரா? அல்லது நடனம் கற்பிக்கும் வேறு சிலர் தம் மாணவர்களுக்கு இதனை கற்பிக்க நாட்டம் கொள்வார்களா? ஆற்றுகைக் கலைஞர்கள் ஆடுவார்களா?

இவையெல்லாம் எப்படியோ ஆனால், ஒரு பொது நோக்கில், இத்தகைய ஓர் அரங்கேற்றத்தில், அரங்கேறுபவர் நடனத்தில் தொடரமாட்டாரெனில், இப்படி புதிதானதாக அல்லாமல், சம்பிரதாயமான ஒரு வர்ணம், இலக்கியத்தில் ஒன்றைக் கற்கும் வாழ்வின் அநுபவமாகும் என்றே தோற்றுகிறது. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலையாளிகள்...

சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய மக்கள் சக்தியினர் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னதான் கூறினாலும், மக்கள் எம்மை அங்கீகரித்துள்ளனர். எம்மைப் பற்றி மக்களுக்கு எதுவித பிரச்சினையும் கிடையாது. நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

தற்போது இடைக்கால அரசே செயற்படுகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு பிறகு பலமானதொரு அரசை அமைப்பதற்குரிய ஆணையை நாட்டு மக்கள் வழங்குவார்கள். பாராளுமன்றத்துக்குத் தகுதியான எதிர்க்கட்சியொன்றையும் அனுப்புமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கள்வர்களைப் பிடிப்பது பற்றி கேட்கின்றனர், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை ஆரம்பமாகியுள்ளது. ஊடகவியலாளர் லசந்த, விளையாட்டு வீரர் தாஜுதீன் உள்ளிட்டோர் தொடர்பான கொலை விசாரணைகள் இடம்பெறுகின்றன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் சிலர் குழப்பம் அடைந்துள்ளனர். நாம் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடமாட்டோம். நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறும். எனவே, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோர் குழப்பமடைந்து, கள்வர்களைப் பிடிக்குமாறு முன்கூட்டியே கூக்குரல் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை - என்றார். (அ)

## அநுர...

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதன் அவசியத்தையும் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்து வெளியிட்டிருந்த மக்கன் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, "வடக்கு மக்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தையோ அல்லது அதிகாரப் பகிர்வையோ கோரவில்லை. அது அரசியல்வாதிகளின் கோரிக்கை மாத்திரமே. இந்த மக்களுக்கு தமது பொருளாதார நலன்கள் நிறைவேற வேண்டும் என்பதே தேவையாக உள்ளது" எனக் கூறினார்.

ரில்வின் சில்வாவின் கருத்துக்கு வடக்கின் தலைமைகள் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளன. அத்துடன், இராஜதந்திர மட்டத்திலும் இந்தக் கருத்து தொடர்பில் அவதானம் செலுத்தப் பட்டுள்ளது. அநுரகுமாரவின் வெளிவிவகார கொள்கைகள் தொடர்பில் இலங்கையில் உள்ள இராஜதந்திரிகள் ஏற்கனவே, அவதானம் செலுத்தியுள்ள சூழலிலேயே தமிழ் மக்களுக்குத் தீர்வு அவசியமில்லை எனக் கூறப்படும் கருத்துகளும் வெளியாகி வருகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் முக்கிய செயல்பாட்டாளர்களாக உள்ளவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்னை தொடர்பில் வெளிப்படுத்தப்படும் கருத்துகளை - குறித்து புதுடில்லி மிகுந்த அவதானம் செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரத்தில் அறிய முடிந்தது.

இது தொடர்பில் மௌனம் காக்கும் இந்தியா, அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லிக்கு பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த உள்ளது.

தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் தொடர்பில் நேரடியான கருத்துகளை ஜனாதிபதி வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்கவும் புதுடில்லி தயாராகி வருவதாக இராஜதந்திர வட்டாரத்தில் அறிய முடிந்தது. (அ)

## பொதுத்...

எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை.

எனினும், இவ்விரு தரப்பும் ஒரு முகாமில் இருந்தவை. எனவே, இரு தரப்பினரும் இணைவதற்குரிய சாத்தியம் உள்ளது. பொதுத்தேர்தலின் பின்னர் இணைந்து, நாட்டு மக்களுக்கு யானையை வழங்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்கும் நோக்கிலேயே பொதுத் தேர்தலிலும் நாம் சிலிண்டர் சின்னத்தை முன்வைத்தோம். பொதுத்தேர்தலில் ஆணை கிடைத்தால் நாட்டை ஆளவும் தயார். எதிர்க்கட்சி பதவி கிடைத்தால் அப்பணியையும் எமது அணி சிறப்பாக முன்னெடுக்கும் - என்றார். (அ)

## வடக்கு...

இருந்த நல்லாட்சியின்போது, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய எமது கட்சிகளின் வலியுறுத்தல் காரணமான இராணுவம் வசம் இருந்த கணிசமான காணிகள் வடக்கில் விடுவிக்கப்பட்டன.

பின்னர் ஜனாதிபதி கோட்டாபய காலத்தில் இந்த காணி விடுவிப்பு நின்று போனது. ஜனாதிபதி ரணிலின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் இதுபற்றி பேச பட்டது. ஆனால், காரியம் எதுவும் நடக்கவில்லை.

இன்று, போர் முடிந்து 15 வருடங்களுக்கு பின்னும் இன்னமும் நிலை பெற்று இருக்கும் மேலதிக இராணுவ முகாம்களை மூடி, விடுவிக்கப்படாமல் எஞ்சி இருக்கின்ற தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அநுர அரசின் கொள்கைதான் என்ன என்பது தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மலையக தமிழர்களை காணி உரிமையை பிரதான அம்சமாக கொண்ட விரிவான ஒரு சாசனத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் நாம் ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித பிரேமதாஸவுடன் செய்திருந்தோம். துரதிஷ்டவசமாக அவர் வெற்றி பெறவில்லை.

ஜனாதிபதி ரணிலின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் மலையக மக்களுக்கு காணி வழங்கல் பற்றி மீண்டும், மீண்டும் பேச பட்டது. நிதி ஒதுக்கீடு செய்ய பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆனால், காரியம் நடக்கவில்லை. ஆனால், காணி உரிமையை சட்டப்படி வழங்க வாய்ப்பு இருந்தும் தனது இரண்டு வருட ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் அதை செய்ய ரணில் தவறி விட்டார்.

இன்று தோழர் அநுர ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ளார். இதுபற்றி மகிழ்ச்சியே. மலையகத்தில் வீட்டு காணி, வாழ்வாதார காணி, தனி வீடு ஆகியன அடங்கிய காணி உரிமையை பெருந்தோட்டங்களில் வாழும் மலையக மக்களுக்கு வழங்குவது தொடர்பில், இன்று மலையகத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை கோரும் அநுர அரசின் கொள்கைதான் என்ன என்பது தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இதற்கான தெளிவான பதில்களையும் வழங்காமல், தமிழ் மக்களுக்கு எந்தவித உத்தரவாதங்களையும் தராமல், மறுபுறம் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரையும் ஏறக்குறை "போர் குற்றவாளிகள்' போல் விமர்சித்துக் கொண்டு, தமிழர்களிடம் வாக்கு கோரும் போக்கைதான் என்.பி.பி-ஜே.வி.பி ஆட்சியாளர்கள் தொடர போகின்றார்களா? என கேட்க விரும்புகிறேன்.

200 வருடங்களாக கொத்தடிமை வாழ்வு வாழும் பெருந்தோட்ட மக்கள் பற்றியும், கிளிநொச்சியில் வருடக்கணக்கில் போராடும், காணாமல்போனவர்களின் குடும்பங்கள் பற்றியும், அனுதாப வார்த்தைகளை அவ்வப்போது அள்ளிக் கொட்டுவது மாத்திரமே என்.பி.பி-ஜே.வி.பி ஆட்சியாளர்களின் கொள்கையாக இருக்க போகிறதா? எனவும் கேட்க விரும்புகிறேன் - என்றார். (அ)

## பதில் பொலிஸ்மா அதிபர்...



பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இச் செயலமர்வில் சிரேஷ்ட வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி. சி. ஏ. தனபால, பிரதிப் பொலிஸ்மா அதிபர் றுவான் குணசேகர, பிரதிப் பொலிஸ்மா அதிபர் (கிளிநொச்சி) சமந்த டி. சில்வா, மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறிமோகனன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. எல். ஏ. சூர்யபண்டார, பொலிஸ் அத்தியட்சகர் திரு. எம். எம். சந்தன ஹமகே, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவின் உதவித் தெரிவாட்சி அலுவலர் உட்பட சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள்.

இக் கலந்துரையாடல் ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் தேர்தல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு ஆராயப் பட்டன.

(அ)

## காணாமலாக்கப்பட்டோர்...

நிலையில், மனுவல் உதயச்சந்திராவை கைது செய்யவே வந்துள்ளோம்.

அவர் வருகை தந்தவுடன், உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாருங்கள் என பொலிஸார் உறவினர்களிடம் தெரிவித்தனர்.

அதற்கமைய நேற்று காலை வீடு திரும்பிய மனுவல் உதயச்சந்திரா, மன்னார் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியவேளை கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் பின்னர், மன்னார் பொலிஸார் நேற்று மதியம், மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது, அவரை ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல, நீதவான் உத்தரவிட்டார்.

நீதிமன்ற விசாரணை ஒன்றுக்கு ஆஜராகாத நிலையிலே, அவரை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

(அ)

## தேர்தல்...

வருவதால் அவற்றை பகிரங்கப்படு வது குறித்து அரச உயர்மட்டத்தில் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் விசாரணைகளை மேற்கொண்ட இரண்டு ஜனாதிபதி ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் அவற்றை அரசாங்கம் வெளியிடாவிட்டால் தாம் வெளியிட உள்ளதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடந்த திங்கட்கிழமை ஊடகச் சந்திப்பொன்றில் கூறியிருந்தார்.

இந்த விவகாரம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், குறித்த அறிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க உதய கம்மன்பிலவுக்கு மூன்று நாட்கள் காலக்கெடு விதிப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

என்றாலும், மறுநாள் மீண்டும் ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, குறித்த அறிக்கைகளை எதிர்வரும் திங்கட்கிழமைக்குகள் வெளியிடாவிட்டால் தாம் அந்த அறிக்கைகளை வெளியிட உள்ளதாக எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்போது குறித்த அறிக்கைகளை வெளியிட வேண்டுமென அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

பொதுத் தேர்தல் நெருங்கியுள்ள சூழலில் இந்த அறிக்கைகளை அரசாங்கம் தாமதப்படுத்த முற்பட்டால் தேர்தல் மேடைகளில் கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதால், அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவது குறித்து உயர்மட்ட ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## என்மீதான...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பிரசார மேடைகளில் எம் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதார பூர்வமாக நிரூபிக்கவேண்டும் என்றும் நாமல் ராஜபக்ச இதன்போது வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் வெற்றி மற்றும் தோல்வி என்பது இயல்பானது. வெற்றி, தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும். பல்வேறு காரணிகளால் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தோம்.

எம்முடன் இருந்தவர்கள் எம்மை விட்டு எதிரணி பக்கம் சென்றதால் பலவீனமடைந்தோம். எம்மை விட்டுச் சென்றவர்கள் தற்போது அரசியலில் நெருக்கடியாகியுள்ளமை கவலைக்குரியது. ஆகவே இவர்கள் எம்முடன் மீண்டும் ஒன்றிணையலாம். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்துக்கு காலவகாசம் வழங்க வேண்டும். ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து 1 மாதம் கூட நிறைவடையவில்லை. ஆகவே விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்க முடியாது. சிறந்த திட்டங்களை முழுமையாக வரவேற்பேன். இயலுமான ஒத்துழைப்புக்களை வழங்குவேன்.

அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் விமர்சித்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் எமக்கு கிடையாது. அரசாங்கம் நெருக்கடிக்குள்ளானால், அரச நிர்வாகம் பலவீனமடையும் அப்போது மக்கள் தான் நெருக்கடிக்குள்ளாகுவார்கள். ஆகவே சிறந்த அரச நிர்வாகத்துக்கு அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

ஜனாதிபதி அநுரகுமார தேர்தல் பிரசார மேடைகளில் எம்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதார பூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன்.

எம்மீதான குற்றச்சாட்டுக்கள் மீது நம்பிக்கை கொண்டே பெரும்பாலானோர் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே அந்த மாற்றத்தை நடை முறையில் செயற்படுத்த வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கொழும்பு வந்தடைந்தது இந்திய கடற்படை கப்பல்



கொழும்பு, ஒக். 20

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான "ஐ.என்.எஸ். கல்பெனி" என்ற கப்பல் நேற்று சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

இக்கப்பலின் கட்டளை அதிகாரி சுனில் குல்ஹாரி ஆவார்.

கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முதன்மையாக விளங்கும் இந்த கப்பலின் சேவை 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இலட்சத் தீவுகளில் ஒன்றான கல்பேனி தீவின் பெயரே இந்த கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

இந்த கப்பலானது கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள், கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுப்படப் பன்படுத்தப்படும்.

இந்த கப்பலானது பல்வேறு தொழில்நுட்ப கருவிகளைக் நாட்டுக்கு கொண்டுவந்துள்ளது. இந்த பொருட்கள் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த கப்பலின் பணியாளர்கள் கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு இடங்களைக் கண்டு களிக்கவுள்ளனர். (அ)

## ஆடை தொழிற்சாலை ஊழியர்கள் 35பேர் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில்!

கொழும்பு, ஒக். 20

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 35 ஊழியர்கள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. ஊழியர்கள் ஆடை தொழிற் சாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்ட பின்னர் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு திடீரென சுகயீன முற்றுள்ளனர். இதனையடுத்து, சுகயீனமுற்ற ஊழியர்கள் நீர் கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்துவதால் பாதிப்பு

கொழும்பு, ஒக். 20

அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் நரம்புகளில் நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின்படி, அழகுசாதனப் பொருட்களில் இருக்கக்கூடிய பாதரசத்தின் அளவு ஒரு கிலோகிராம் ஒரு மில்லிகிராம் ஆகும். ஆனால் சருமத்தை வெண்மையாக்கும் அழகு சாதனப் பொருட்களில் அந்த வரம்புக்கு மேல் பாதரசம் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக தோல் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது போன்ற அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தும்போது மிகவும் அவதானமாக செயற்படுமாறு சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# அநுர அரசின் செயலால் மகிந்தவுக்கு அச்சுறுத்தல்!

### கூறுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு, ஒக். 20

**அநுர அரசாங்கத்தின் செயற்பாட்டால் நாட்டில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த தலைவர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட்ட சில வாகனங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சாகர காரியவசம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர் என்ற வகையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையில், இதனை பொருட்படுத்தாது அரசாங்கம் இவ்வாறு செயற்படுவது தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க புலனாய்வு அமைப்புக்களிடமிருந்து ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட்ட சில வாகனங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி செயலகம் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக மகிந்த ராஜபக்சவின் பேச்சாளர் உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், மகிந்த தற்போது தங்காலை வீட்டில் தங்கியுள்ளதால், அவர் கொழும்பு திரும்பிய பின்னர் வாகனங்களை கையளிப்பார் என பேச்சாளர் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி அநுரவால் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஒக். 20

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க திறமையானவராக இருந்தாலும் தனியொருவரால் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற பேரணியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த 75 வருடங்களாக ஆட்சியிலிருந்த எவரும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் என நினைத்திருக்கமாட்டார்கள். அனால் மக்கள் அந்த அதிகாரத்தை எமக்கு அளித்தார்கள்.

நாட்டை மீட்பதற்கு வலுவான அமைச்சரவை மற்றும் முற்போக்கான பாராளுமன்றம் அவசியம். ஜனாதிபதியால் மாத்திரம் இந்த நாட்டை கட்டியெழுப்புவது கடினம் எனவே பாராளுமன்றத்திற்கு



சிறந்த அணியை அனுப்புவது மக்களின் பொறுப்பு.

எனவே நாட்டின் தரத்தை மாற்றியமைக்கும் குழுவொன்றை பாராளுமன்றத்திற்குத் தேர்வு செய்யும் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# அநுர அளித்த வாக்குறுதிகளை உடனே நிறைவேற்ற வேண்டும்!

### ஆனந்த பாலித கோரிக்கை

கொழும்பு, ஒக். 20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அளித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சிபீடமேறுவதற்கு முன்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என கூறினார். இம்முறை குறைக்கும் திறன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி கூறியது போன்று நடந்திருந்தால் எரிபொருள் விலை திருத்தத்தின்போது பெற்றோல் 82.50 ரூபாவினாலும் மண்ணெண்ணெய் 19 ரூபாவினாலும் சுப்பர் டீசல் 33 ரூபாவினாலும் குறைக்கப்பட்டிருக்கவேண்டும்.

எவ்வாறாயினும், ஒக்ரோபர் முதலாம் திகதி மின்சாரக் கட்டணத்தை மீளாய்வு செய்யும் திகதி , ஆனால் எவ்வித மாற்றமும் இதுவரை இடம்பெறவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், குற்றச்சாட்டுக்கள் உள்ள எவருக்கும் அரசாங்கத்தில் நியமனம் வழங்கப்பட மாட்டாது என தேர்தல் மேடைகளில் கூறப்பட்ட நிலையில், தற்போது அவர்களுக்கும் அரச நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது ராஜபக்ஷ மற்றும் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடு. தற்போதைய அரசாங்கமும் அவ்வாறான செயற்பாடுகளையே பின்பற்றுகிறது - என்றார். (அ)

## ரணில் மற்றும் மகிந்தவின் வாகனங்கள் கோரும் அரசு

கொழும்பு, ஒக். 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் பயன்படுத்திய மேலதிக அரசாங்க வாகனங்களை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த வாகனங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினம் வரை அவை கையளிக்கப்படவில்லை என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் 03 அரச வாகனங்களை மாத்திரம் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ளது, ஆனால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 அரச வாகனங்களையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 15 அரசாங்க வாகனங்களையும் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## எரிபொருளின் விலையை இன்னும் குறைக்கமுடியும்

கொழும்பு, ஒக். 20

விலை சூத்திரத்துக்கு அமைய எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி எரிபொருள் விலையை 15 முதல் 20 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் குறைக்க முடியுமென முன்னாள் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எரிபொருள் விலை தொடர்பில் கருத்துரைத்தவர்கள், தற்போது மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் எனவும் முன்னாள் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org